

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சுற்றுலாவியல் ஓர் அறிமுகம் | 1-21 |
| 2. | சுற்றுலாவின் வகைகள் | 22-32 |
| 3. | காலங்கள்தோறும் சுற்றுலா (சுற்றுலா வளர்ச்சி) | 33-56 |
| 4. | பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம் | 57-65 |
| 5. | நவீன காலத்தில் சுற்றுலாவின் முக்கியம் குறிப்பாக இந்தியாவைப் பற்றி | 66-79 |
| 6. | சுற்றுலாவும் பன்னாட்டு வாணிகமும் | 80-92 |
| 7. | சுற்றுலா வளர்ச்சிக்கான காரணங்கள் | 93-106 |
| 8. | சுற்றுலா – சமூக, கலாச்சார முக்கியம் | 107-113 |
| 9. | சுற்றுலா – பொருளியல் முக்கியம் | 114-123 |
| 10. | விடுதிகள் | 124-136 |
| 11. | உணவகங்கள் | 137-142 |
| 12. | போக்குவரத்து | 143-151 |
| 13. | பயணப் பணி நிறுவனம் | 152-166 |
| 14. | சுற்றுலா நிறுவனங்கள் | 167-182 |
| 15. | சுற்றுலா அமைப்பாளர்கள் | 183-188 |
| 16. | சுற்றுலா வழிகாட்டிகள் | 189-197 |
| 17. | சுற்றுலா அமைப்பாளர்கள் (பெரிய அளவில்) | 198-206 |
| 18. | ஒப்பந்த வகைகள் | 207-214 |
| 19. | பயணப்பணி நிறுவனம் – சிறு முகவர் | 215-216 |
| 20. | சுற்றுலாவின் சந்தை இயல் | 221-234 |
| 21. | சுற்றுலாவும் தேசியப் பொருளியலும் | 235-254 |
| 22. | பாரதத்தில் சுற்றுலா | 255-282 |
| 23. | தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி | 283-289 |
| 24. | விழுறை நாள் சுற்றுலா | 290-294 |
| 25. | சமய, ஆன்மிகச் சுற்றுலா | 295-301 |
| 26. | பண்பாட்டுச் சுற்றுலா | 302-305 |
| 27. | பயண ஆவணங்கள் | 306-310 |
| 28. | சுற்றுலாவின் பயன்பாடு | 311-316 |
| 29. | நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் | 317-320 |
| 30. | சுற்றுலா பண்டங்கள் (செய்பொருட்கள்) | 321-326 |
| 31. | சுற்றுலாவின் கேடுகள் | 327-335 |
| 32. | பாரதத்தில் சுற்றுலாத் தொழிலை முன்னேற்றுவதற்கான வழிகள் | 336-339 |
| 33. | இந்தியச் சுற்றுலாத் தலங்கள் | 340-388 |
| | தென் இந்திய சுற்றுலாத் தலங்கள் | 389-408 |
| 34. | இந்தியாவின் வன விலங்கு, பறவைகள் புகலிடங்கள் | 409-417 |
| 35. | இந்தியத் திருவிழாக்கள் | 418-424 |
| 36. | சுற்றுலா மேம்பாடு | 425-432 |
| 37. | மலை வாழிடங்கள் | 433-436 |
| 38. | கடற்கரைச் சுற்றுலா | 437-440 |
| 39. | இந்தியாவில் நிகழ்த்து கலைகள் | 441-449 |
| | பிற்சேர்க்கை.... | |

## பாரதத்திற்கு வருகை புரிந்த அயல் நாட்டுப் பயணியர் மற்றும் பாரதத்திற்குக் கிடைத்த அந்நியச் செலாவணி

| ஆண்டு | பயணியர் எண்ணிக்கை | ஆண்டு வளர்ச்சி சதவிகிதத்தில் | ஈட்டிய அந்நியச் செலாவணி கோடியில் |
|---|---|---|---|
| 1981 | 1279210 | 2 | |
| 1982 | 1288162 | 0.7 | |
| 1983 | 1304976 | 1.3 | |
| 1984 | 1193752 | -8.5 | |
| 1985 | 125938 | 45.5 | |
| 1986 | 1451076 | 15.2 | |
| 1987 | 1484290 | 2.3 | |
| 1988 | 1590661 | 7.2 | |
| 1989 | 1736093 | 9.1 | |
| 1990 | 1707158 | -1.7 | |
| 1991 | 1677508 | -1.7 | |
| 1992 | 1867651 | 11.3 | |
| 1993 | 1764830 | -5.5 | |
| 1994 | 1886433 | 6.9 | |
| 1995 | 2123683 | 12.6 | 8430 |
| 1996 | 2287860 | 7.7 | 10046 |
| 1997 | 2374094 | 3.8 | 10511 |
| 1998 | 2358629 | -0.7 | 12150 |
| 1999 | 2481928 | 5.2 | 12150 |
| 2000 | 2649378 | 6.7 | 14238 |
| 2001 | 2537282 | 4.2 | 14344 |
| 002 | 2384364 | -6 | 14420 |
| 003 | 2726214 | 14.3 | 17049 |
| 004 | 3457477 | 26.8 | 21828 |
| 05 | 3918610 | 13.3 | 25172 |
| 06 | 4447167 | 13.5 | 29603 |
| 07 | 5081504 | 14.3 | 44360 |
| 8 | 5366966 | 5.6 | 50730 |
| 9 | 5108579 | | 54960 |





அமெரிக்காவின் நியூயார்க் நகரிலுள்ள மெழுகு அருங்காட்சியகத்தில் மாவீரன் நெப்போலியனுடன் நூலாசிரியர்

# 1. சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்
## (TOURISM - AN INTRODUCTION)

**முன்னுரை :** ஒருவர் தமது இருப்பிடத்தை விட்டு வெளியில் ஓரிடத்திற்குச் சென்று, தங்கி, மகிழ்ந்து, புத்துணர்வுப் பெற்று மீளுதல் சுற்றுலாவாகும். அருகில் உள்ள நகரம், வரலாற்றுப் பெருமை மிக்க நினைவுச் சின்னம், இயற்கையெழில் மிக்க இடம், கண்ணைக் கவரும் கலைக்கருவூலம் ஆகியவற்றிற்குச் சென்று, தங்கி மனநிறைவு பெறலாம் செலவச்சிறப்பு மிக்கோர் அயல் நாடுகளில் பயணம் செய்வதும் சுற்றுலாவே ஆகும்.

சுற்றுலாவியல் ஓர் வளர்ந்து வரும் கோட்பாடு; பல கோணங் களைக் கொண்டது. எனவே சுற்றுலா என்றால் என்ன ? சுற்றுலாப் பயணி யார் ? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண்பதில் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

**சுற்றுலா எனும் சொல் :** சுற்றுலா பற்றிய விளக்கங்களை அறிவதற்கு முன்பு 'சுற்றுலா' எனும் சொல் எப்படி வந்தது என்பதைக் காண்பது அவசியம். Tour எனும் ஆங்கிலச் சொல் TORNUS எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. டோர்னஸ் என்றால் சக்கரம். எனவே இச்சொல் சுற்றி வருவதைக் குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியினின்றும் பிறந்த Tour எனும்சொல் கி.பி. 1292 இல் ஆங்கில மொழியில் கலந்தது; பயணத்தைக் குறித்தது. பல இடங்களைச் சுற்றிப் ...பது டூர் ஆகும். டூரிஸ்ட் எனும் சொல் பயணி அல்லது யாத்ரீகரைக்

சுற்றுலாகும்.

தனக்கு ...

நிமித்தம் ...

`TOUR' எனும் சொல் ஹிப்ரு மொழியில் உள்ள `TORAH' எனும் சொல்லிலிருந்து பிறந்ததாகக் கூறுவாரும் உள.

ஓவ்வொரு மனிதனும் இன்பப் பொழுதுபோக்கிற்காகத் தனது விருப்பத்திற்கேற்பப் பல இடங்களுக்குப் பயணம் செல்கிறான். அற்புதமான, அதிசயமான, தொன்மைச் சிறப்பு மிக்க மையங்களையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகளையும் சமயத் தொடர்பான புனிதத் தலங்களையும் ஆடம்பர ஆரவாரமிக்க நகரங்களையும் கண்டுகளிக்க அவனது மனம் துடிக்கிறது. எனவே மனிதன் பொருட் செலவையும் பாராமல் அரியனவற்றைப் பெரியனவற்றைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் நீந்துகிறான். தனது துன்பத்தைத் துயரத்தைப் போக்கிக் கொள்கிறான். மேலும் பிறபகுதி வாழ் மக்களின் பழக்க வழக்கங்களை நேரடியாகக் கண்டு மகிழ்வதில் அவன் பெரு விருப்பம் கொள்கிறான். அதில் இன்பம் காண்கிறான். இவ்வாறு மனிதன் பல்வேறு இடங்களில் உறவாடுவதன் மூலம் மனித நேயம் வளர்கிறது. உலக ஒற்றுமை ஓங்குகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் கனவு நனவாகிறது.

மக்களின் அறிவும் உல்க ஞானமும் சுற்றுலாவால் வளர்கிறது. பிறபகுதிகளில் உள்ள மக்களுடன் தொடர்பு ஏற்படுவதால், ஒற்றுமை உணர்வு வளர்ந்து வேற்றுமை உணர்வும் பகைமையும் மறைகின்றன. சுற்றுலா வளர வளர நாடுகளின் பொருளாதாரமும் வளர்கின்றது.

மக்களில் பலர் பல இடங்களுககுச் செல்வதில் பேரார்வம் காட்டுகின்றனர். அவர்கள் தங்களது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் கழிப்பதுடன், மனச் சோர்வைப் போக்கி, மனமகிழ்வு கொள்கின்றனர். மேலும் உழைத்து உழைத்து அலுத்துப் போன மக்களுக்குச் சுறுசுறுப்பும் புத்துணர்ச்சியும் ஊட்டக் கூடிய பொழுதுபோக்கு சுற்றுலாவேயாகும். வரலாற்று மதிப்பு வாய்ந்த தலங்களும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களும், திறந்தவெளிக் கண்காட்சிகளாக விளங்குகின்றன. இக்கண்காட்சிகளைக் கண்டு இன்புறுவதில், மனித மனம் முனைவதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. எனவே சுற்றுலா மனிதனின் முக்கியத் தேவைகளுள் ஒன்றாக ஆகிவிட்டது என்றால் மிகையாகாது.

## சுற்றுலாவியல் - ஒரு விளக்கம்

ஆரவாரமிக்க இவ்வுலகில், மனிதர்கள் ஓய்வெடுத்துக் செ பொருட்டும், உடல் நலம் பேணும் பொருட்டும், விளை போட்டிகளைக் கண்டு களிக்கவும், குதிரைப் பந்தயம், படகு



மலர்க்காட்சி, நாயினக்காட்சி ஆகியவற்றைக் கண்டு களிக்கவும், புனிதத் தலங்களுக்கு யாத்திரை செய்யவும் சுற்றுலா செல்வதுண்டு. அறிவியல் முன்னேற்றம் பெருகியுள்ள தற்காலத்தில் மனிதன் மிகக் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் மிகத் தொலைவில் உள்ள இடங்களுக்கும் சென்றுவர முடிகிறது. எனவே ஓரிடத்தில் வசிப்போர் தமது ஓய்வு நேரத்தில் மற்றொரு இடத்திற்குச் சுற்றுப்பயணம் செய்து மனநிறைவு கொள்வதனைச் சுற்றுலா எனக் கூறலாம். சுற்றிவருதலின் இது <u>சுற்றுலா</u> ஆயிற்று. இராகுல் சாங்கிர்த்தியாயன் இதனையே <u>ஊர் சுற்றுதல்</u> என்பார். சுற்றுலாப் பயணியை <u>அவர் ஊர் சுற்றி</u> என்றே அழைக்கிறார். சுற்றுலாத் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் அறிவியல் சார்ந்த படிப்பினையாக்கிக் கொள்ளும் நிலையைச் 'சுற்றுலாவியல்' என அழைப்பது பொருத்தமாகும்.

## பயணங்களின் காரணங்கள்

பண்டைய மக்கள் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் பெயர்ந்து சென்றது வாழ்க்கைப் பயணம்; பொருளீட்டும் நோக்கத்துடன் துபாய் செல்வது பொருளீட்டுப் பயணம்; யூதர்கள் மோசஸ் தலைமையில் எகிப்து நாட்டிலிருந்து யூதேயாவிற்குச் சென்றது விடுதலைப் பயணம்; பக்தர்கள் காசி, இராமேஸ்வரம் செல்வது புனிதப் பயணம்; கம்ப்யூட்டர் படிப்பில் மேல் படிப்பிற்காக ஜப்பான் செல்வது கல்விப் பயணம்; ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் பழங்குடிகளின் வாழ்க்கை முறைகளை ஆராயச் செல்வது ஆய்வுப் பயணம்; மருத்துவச் சிகிச்சைக்காக நியூயார்க்கிற்கு விமானப் பயணம் மேற்கொள்வது மருத்துவப் பயணம்; எவரஸ்ட் சிகரத்தின் உயரத்தைக்காண அதன் உச்சிக்கு ஏறினால் அது துணிகரப் பயணம்; ஜெனிவாவில் நடைபெறும் உலகத் தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்வது தொழிற்பயணம்; ஆஸ்திரேலியாவின் தலைநக்ராம் சிட்னியில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக்களைக் காணச் சென்றால் அது விளையாட்டுப் பயணம்; கைத்தறித்துணி ஏற்றுமதியாளர்கள் வுணிகத்தை மேம்படுத்த அயல் நாடுகளுக்குச் செல்வது வணிகப் பயணம்; சிற்பக்கலையில் ஆர்வம் கொண்ட கலைஞர் ஒருவர் கஜீராகோ சிற்பங்களைக் காண கஜீராகோ செல்வது கலைப்பயணம். இவையனைத்தும் பயணங்களே ஆகும்.

மேற்கூறப்பட்ட அனைத்துப் பயணங்களும் பொதுவாக சுற்றுலாவாகக் கருதப்பெறுவதில்லை. ஏனெனில் இவர்கள் அனைவரு தனக்கு ஆர்வமான ஒரே ஒரு செயலிலேயே ஈடுபடுகின்றனர். வணி நிமித்தம் வெளிநாடு செல்வோர் வணிகத் தொடர்பான முகவர்களை

(ஏஜெண்டுகளை) மட்டுமே சந்தித்துவிட்டு மற்ற இடங்களைப் பார்க்காமல் விரைவில் வந்து விடுகின்றனர்.

இருப்பினும் அரசுப் பணி நிமித்தமாக சென்னை செல்லும் அலுவலர் ஒருவர், தமது பணிகளை முடித்துக் கொண்டு வண்டலூர் மிருகக் காட்சி சாலை, சென்னை அருங்காட்சியகம், மெரினா கடற்கரை ஆகியவற்றையும் கண்டு களித்துத் திரும்புகின்றார். இதுபோன்ற அலுவலகப் பணியாளரின் அலுவலகப் பயணங்கூட சுற்றுலாவாகவே கருதப்படுகின்றது.

எனவே இன்பப் பொழுது போக்கு, மகிழ்ச்சி, ஓய்வு, அரிய, பெரிய காட்சிகளைக் காணல், அறிவு வளர்ச்சி, கலைக்கோயில்களைக் காணுதல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றிற்காகப் பயணம் செல்லலும் சுற்றுலாவின் பாற்படும்.

"ஓய்வு நேரத்தை அறிவுப் பூர்வமாய் பயன்படுத்தும் கலைதான் நாகரிகத்தின் மிகச் சிறந்த அடையாளம்" என்ற அறிஞர் <u>பெட்ரான்ட் ரஸ்ஸல்</u> கூற்றும் சிந்திக்கத் தக்கது. எனவே சுற்றுலா செல்லுதலும் நாகரிகத்தின் வளர்ச்சியே.

**அறிஞர்களின் விளக்கங்கள்**

சுற்றுலாவின் இயல்புக் கூறுகளைப் பலர் பலவிதமாகச் சுட்டிக்காட்டுவர். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

"மனித செயல்பாடுகள். இயற்கைக் கூறுபாடுகள் ஆகியவற்றில் இதுகாறும் அறிந்திராதவற்றை ஆய்வு செய்யப் புகுதலே சுற்றுலா" என்பது <u>பிரிமால்ட்</u> அவர்களின் விளக்கமாகும். டாக்டர் <u>ஷியாடின்</u> அவர்கள் "ஓய்வு கவன மாற்றம் மற்றும் கலாசாரக் கூறுகளில் மனநிறைவளிக்கும் ஒரு சமூகச் செயல்பாடே சுற்றுலா" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சுற்றுலா என்பது ஒருவர் தான் வாழ்ந்து வரும் அல்லது பணிபுரிந்து வரும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குக் குறுகிய காலமே சென்று தங்கி, அங்கு பல இடங்களுக்கு இன்பப் பயணம் சென்று பார்த்து வருவதாகும்" என்று 1976-இல் சுற்றுலாவிற்கு <u>இங்கிலாந்து சுற்றுலாக் கழகம்</u> விளக்கம் தந்தது.

"விளையாட்டுப் போட்டிகளைக் காணச் செல்லுதல், ஊர்களைச் சுற்றிப் பார்த்தல், சைக்கிள்களில் பயணம் செய்தல், உல்லாசப் படகுகளில் பயணம் செய்தல், முகாமிடல், மன மகிழ்வுக்காகப் பிற இடங்களை நோக்கிச் செல்லுதல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகக் கருதப்படுவதே



சுற்றுலா" என்பது <u>ஜோஸ் இக்னாசியோ டி அரில்லாகா</u> என்பவரின் வித்தியாசமான விளக்கம் ஆகும்.

1981-ல் இங்கிலாந்தில் கூடிய <u>'பன்னாட்டுச் சுற்றுலா மாநாடு'</u> "சுற்றுலா என்பது ஒரு குறிப்பிட்ட மக்களால் தாங்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலைக்கு அப்பால் சென்று செயல்படும் நடவடிக்கைகளே ஆகும்" என்ற விளக்கத்தை அளித்தது.

"சுற்றுலா நவீன காலத்தில் ஒரு தனிச் சிறப்பிடத்தை வகிக்கின்றது. இழந்த வலிமையை மீண்டும் பெற, மாறுபட்ட சூழ்நிலைகளைக் காண, இயற்கை அழகினைக் கண்டு மகிழ அது ஒரு வளர்ந்து வரும் தேவையாகிவிட்டது" என்ற <u>எஃபிரியூலர்</u> அவர்களது விளக்கம் சுற்றுலாவின் நவீன கால அவசியத்தை வலியுறுத்துகின்றது.

<u>பூர்கார்ட்டு, மெட்லிக்</u> போன்ற அறிஞர்கள் "சுற்றுலா என்பது ஒரு பயணியின் குறுகிய காலப் பயணமாகும். அவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணம் செய்வர். அவர்கள் பிற இடங்களில் தற்காலிகமாகத் தங்குவர்" என்று சுற்றுலாவின் தன்மையைச் சுட்டுகின்றனர். அவர்கள் மேலும் "சுற்றுலா ஓய்வு நேரத்தோடும் உலகத்தோடும் தொடர்பு கொண்டது. அது ஒரு தொழிலகமும் ஆகும். நாடுகளும் நகரங்களும் கிராமப் பகுதிகளும் பயணிகளைக் கவர்ந்து இழுப்பதால் அதற்கு நல்ல எதிர்காலம் உள்ளது. அது செல்வத்தையும் வேலை வாய்ப்பையும் உருவாக்குகிறது." என்று சுற்றுலாவின் சிறப்பையும் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

<u>ஜோவியக்</u> என்பார் சுற்றுலாவை ஓர் சமுதாய இயக்கமாகவே காண்கிறார். "ஓய்வெடுப்பதற்காகவும், பொழுது போக்கிற்காகவும், கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான ஒரு சமுதாய இயக்கம் இது" என்பது அவரது கருத்தாகும். எனவே சுற்றுலாவியல் தொழில் உறவு பூண்ட சமுதாய அறிவியலாக விளங்குகின்றது என்பது உண்மையாகும்.

ஆஸ்திரிய நாட்டுப் பொருளாதார நிபுணரான <u>ஹெர்மன் வி.சுல்லார்டு</u> என்பார் "ஒரு நாட்டிற்கோ, நகரத்திற்கோ, பிராந்தியத்திற்கோ வெளிநாட்டுப் பயணியர் வருகை புரிவது, தங்குவது, செல்வது, பொருளாதார நோக்குடையது போன்ற அனைத்துச் செயல்பாடுகளின் தொகுப்பே சுற்றுலா" என்று குறிப்பிட்டுள்ளமை சுற்றுலாவின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

"பயணிகளின் பல்வேறு நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையே சுற்றுலா ஆகும். பொருள்தேடும் அடிப்படையிலோ, ஓரிடம் சென்று

நிரந்தரமாகத் தங்கி வாழ வேண்டும் என்ற எண்ணத்திலோ அல்லாமல், அந்நியர்களால் மேற்கொள்ளப்படும் பயணம், தங்குதல் போன்றவற்றின் மொத்த உருவே சுற்றுலா ஆகும்" என்ற கருத்தினை ஹன்சிகர் மற்றும் கிராட் (Hunziker and Krapt) எனும் ஸ்விஸ் அறிஞர்கள் கொண்டுள்ளனர். சுற்றுலா அறிவியல் வல்லுநர்களின் பன்னாட்டுக் கழகமும் (International Association of Scientific Experts in Tourism) இவ்விளக்கத்தையே ஏற்றுக் கொண்டுள்ளது. பயணிகளின் நோக்கம் பொருள் சம்பாதித்தலாக இருக்க முடியாது என்பது இவரது ஆணித்தரமான வாதம். இக்கருத்தினையே அப்துல்வகாப் அவர்கள் சற்று விளக்கமாகக் கீழ்க்காணும் முறையில் வலியுறுத்துவார். "சுற்றுலா எனப்படுவது ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லையைத் தாண்டியோ, நாட்டிற்குள்ளேயோ வாழ்கின்ற மக்களிடையே ஓர் இணைப்பை உருவாக்கக் கூடிய பயன் மிகு மனித நடவடிக்கை ஆகும். அது சம்பாதிக்கும் நோக்கம் தவிர்த்து, பல்வேறு வகையான விருப்பங்களை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற, தற்காலிகமான வட்டாரம், நாடு, கண்டம் போன்றவற்றின் இடையே ஏற்படும் இடப்பெயர்ச்சி ஆகும்." இதனைப் போன்ற சுற்றுலாக்களால் ஏற்படும் பயன்கள்-பொருளாதார, பண்பாட்டு, சமுதாய வாழ்க்கை முறைகள் வழி வெளிப்படுகின்றன என்பதனையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

"I shall Dream" இது டாக்டர் தேஜ்வீர்சிங் அவர்கள் சுற்றுலாவிற்குத் தந்த விளக்கம். அதாவது "நான் கனாக் காண்பேன்".

"கற்பனைக்கும் உண்மைக்கும் இடையே நடைபெறும் உரையாடலே சுற்றுலா" (Dialogue between Imagination and destination) என்பது ஒரு புரட்சிகரமான விளக்கம்

சுற்றுலா என்பதில் பின்னிப் பிணைந்துள்ள பிறதுறைகளையும், பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் கீழ்க்காணும் வரிகளால் கோடிட்டுக் காட்டுகிறது.

"இன்பப் பொழுது போக்கிற்காகப் பயணம் மேற்கொள்ளுதல் அல்லது பயணிகளுக்கு வழிகாட்டுதல், சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் முதலாய பணிகளைச் செய்யும் தொழிலகம் சுற்றுலா எனப்பெறும்".

**முடிவுரை :** சுற்றுலாவியல் என்பது சுற்றுலாப் பயணிகள் மட்டுமே அடங்கியதல்ல. சுற்றுலாப் பயணிகளுக்குத் துணை புரியும் வழிகாட்டிகள், சுற்றுலாக் கழகங்கள், சுற்றுலாப் பயண முகவர்கள், தங்கும் விடுதிகள், போக்குவரத்து வசதிகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதே



சுற்றுலாவியல் ஆகும். இதனால் சுற்றுலாவியல் தன்னந்தனியானது அல்ல; பல துறைகளைத் தன்னகத்தே கொண்டதுதான் என்பது உணரப்படுகின்றது. இவற்றுள் போக்குவரத்து, சுற்றுலா மையம், தங்கும் வசதி - ஆகிய மூன்று மட்டுமே அடிப்படைகளாகும்.

## அ. சுற்றுலாப் பயணி (TOURIST)

மன மகிழ்ச்சிக்காகவும், இன்பப் பொழுது போக்கிற்காகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்பவன் சுற்றுலாப் பயணி ஆவான். தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற மனிதனின் ஆர்வமே, பயணத்தின் தூண்டு கோலாக அமைகிறது. 'சுற்றுலாப் பயணி' யார் ? என்பதனை விளக்குதல் எளிதன்று. காரணம் இதற்குப் பல வகையான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசிலவற்றைக் காண்போம்.

**விளக்கங்கள்**

பெக்கி என்னும் அறிஞர் 'சுற்றுலாப் பயணி' என்பவர் ஒரு 'பயணியே' எனக் கூறுவார்.

உலக சுற்றுலாக் கழகம் "ஒரு நாட்டில் குறைந்த அளவு 24 மணி நேரமாவது பயணம் செய்பவர் சுற்றுலாப் பயணி என அழைக்கப்படுவார்" என்று வரையறை செய்கிறது.

"மன மகிழ்ச்சிக்காக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்பவர் சுற்றுலாப் பயணி ஆவார்" என்று அகராதி கூறுகிறது.

"ஒரு அயல்நாட்டு கடவுச்சீட்டுடன் (பாஸ்போர்ட்) நிரந்தரமாகத் தங்காமல், வேலை பார்க்கும் நோக்கமின்றி 24 மணி நேரத்திற்கு மேல் தங்க வருபவர்களே சுற்றுலாப் பயணி ஆவார்" என்பது 1971-ஆம் ஆண்டுமுதல் இந்தியா வகுத்துள்ள வரையறையாகும்.

லிக்கோரிஷ் என்பார் "தான் வசிக்கும் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று, அங்கு 24 மணி நேரத்திற்கு அதிகமாகவும் 12 மாதங்களுக்குக் குறைவாகவும் தங்கும் நபரே சுற்றுலாப் பயணி ஆவார்" என்று கருத்துத் தெரிவிக்கிறார்.

"ஆர்வத்தின் பொருட்டுப் பயணம் மேற்கொள்பவரோ அல்லது தானும் பயணம் செய்தேன் என்று பிறரிடம் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் நப்பாசை கொண்டவரோ சுற்றுலாப் பயணியாகக் கருதப்படுவார்" என்று யுனிவர்சல் அகராதி வரையறை செய்கிறது.

'எவரொருவர் ஆர்வத்தின் காரணமாகவோ நேரத்தைப் போக்குவதற்கோ பயணம் மேற்கொள்கிறாரோ, அவரே சுற்றுலாப் பயணி ஆவார்' என்று பிரான்சு நாட்டறிஞர் <u>லிட்ரி</u> குறிப்பிட்டுள்ளார்.

<u>ஏ.கே. நார்வல்</u> என்பார் "எவரொருவர் எவ்விதக் குறிக்கோளும் இன்றி, தனது நாட்டின் எல்லைகளைக் கடந்து, பிறநாட்டில் தற்காலிகமாகத் தங்கி, தான் எங்கோ ஈட்டிய பணத்தை, அங்கு செலவிடுகின்றாரோ அவரே சுற்றுலாப் பயணி ஆவார்" என்ற சரியான விளக்கத்தைக் கூறியுள்ளார்.

<u>பன்னாட்டுக் கழகத்தின் பொருளாதாரக்குழு</u> 1947 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணி பற்றிக் கீழ்க்காணும் விளக்கத்தைக் கூறுகிறது.

"ஒருவர் தான் வசிக்கும் நாட்டைவிட்டு வேறு இடத்திலோ, வேறு நாட்டிலோ 24 மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்வாராயின் அவர் சுற்றுலாப் பயணி என்று அழைக்கப்படுவார்". பின்னர் இதில் சில மாற்றங்களுடன் "சம்பளம் இல்லாமல், வேலை நோக்கம் கருதாமல் தமது வழக்கமான இருப்பிடத்தை விட்டு விலகி, புதிய நாட்டிற்குச் செல்பவரே சுற்றுலாப் பயணி" என அழைக்கப்படுவார் என்று கூறப்பட்டது.

அடுத்து சுற்றுலாப் பயணி யார் ? சுற்றுலாப் பயணி அல்லாதார் யார் ? என்பது குறித்தும் இப்பொருளாதாரக் குழு சில வரையறைகளைக் கூறியுள்ளது. சுற்றுலாப் பயணி என்போர் "மன மகிழ்ச்சிக்காகவும், சொந்தக் காரணங்களுக்காகவும், உடல் நலன் பொருட்டும் பயணம் செய்வோர், பன்னாட்டுக் கருத்தரங்குகள், மாநாடுகள் (விளையாட்டு, சமயம், அறிவியல்) ஆகியவற்றில் பேராளர்களாகக் கலந்து கொள்வோர், கப்பல் மூலம் 24 மணி நேரத்திற்கும் குறைவாகப் பயணம் செய்வோர்" ஆவர்.

சுற்றுலாப் பயணிகள் அல்லாதோர் எனப்படுவோர் "அயல் நாட்டிற்குச் சென்று குடியேறுவோர், ஒரு நாட்டிற்கு வேலை செய்வதற்காகச் செல்வோர், விடுதிகளில் தங்கிப் படிக்கச் செல்லும் மாணாக்கர், 24 மணி நேரத்திற்கும் அதிகமாக ஒரு நாட்டில் பயணம் செய்து அந்த நாட்டைக் கடந்து செல்வோர்" ஆகியோராவார்.

மேற்கூறப்பட்ட பலவிதமான விளக்கங்களைக் கொண்டு சுற்றுலாப் பயணி என்பவன் 24 மணி நேரத்திற்கு மேலாக ஒரு நாட்டில் மன மகிழ்ச்சி, ஓய்வு, பொழுதுபோக்கு ஆகியவற்றிற்காகத் தங்குபவன் என்பது புலனாகும்.

குறைந்த பட்ச தங்கும் நேரத்தைச் சுட்டிக்காட்டும் இவ்விளக்கங்கள், அதிகபட்ச காலம் யாது ? என்பதனைப் பற்றி <u>லிக்கோஷ்</u>



என்பவரைத் தவிர எவரும் கூறவில்லை. எனவே தனது இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, ஒரு நாளைக்கு மேல் பிற இடத்தில் அதாவது உள் நாட்டிலோ அல்லது அயல்நாட்டிலோ பயணம் செய்து தங்கினாலும், அவர் சுற்றுலாப் பயணியாகக் கருதப்படுவார் என்பது அறியப்படுகிறது. இதில் உள்நாட்டுப் பயணமும் அடங்கும்.

சுற்றுலாப் பயணி யார் ? என்பதனை அறிந்து கொண்ட நாம் சுற்றுலாப் பயணிகளைக் கீழ்க்காணும் முறையில் வகைப்படுத்தலாம்.

**இன்பச் சுற்றுப் பயணிகள் (EXCURSIONISTS)**

இன்பச் சுற்றுப் பயணிகள் என்போர் தற்காலிகமாக 24 மணிநேரத்திற்கும் குறைவான காலம் பயணம் செய்பவர் ஆவார். இவர்கள் உள்நாட்டுப் பயணத்தை மேற்கொள்பவர். இவர்கள் சுற்றுலாப் பயணி ஆக மாட்டார்கள். சுற்றுப்பயணம் சுற்றுலாப் பயணம் ஆகாது.

**பொழுது போக்குப் பயணிகள் (RECREATIONERS)**

தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் அறிவுப் பூர்வமாகச் செலவிட விரும்புவோர் பொழுது போக்குப் பயணியர் ஆவர். பொழுது போக்குகள் பலவகைப்படும். இவற்றுள் ஒவ்வொரு பயணியரும் தனது விருப்பத்திற்கேற்ப ஏதாவது ஒரு பொழுது போக்கைத் தேர்ந்தெடுக்கலாம். தானே ஈடுபடும் அல்லது பங்குபெறும் பொழுதுபோக்கு தன்வினைப் பொழுது போக்கு ஆகும். ஆனால் பிறர் விளையாடும் விளையாட்டுக்களைக் கண்டுகளிப்பது பிறவினைப் பொழுது போக்காகும். ஒருவர் தான் வாழும் இடத்தைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று பொழுது போக்கினால் அவரைப் பொழுது போக்குப் பயணி என்கிறோம். எடுத்துக்காட்டாக பக்கத்து நகரத்தில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிப்பதைக் கூறலாம். மேலை நாடுகளில் பலர் இதுபோன்ற பொழுது போக்குகளில் விரும்பி ஈடுபடுவர்.

**விடுமுறை பொழுதுபோக்குவோர் (VACATIONERS)**

விடுமுறை காலங்களில் தாம் வாழும் இடத்தைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று பொழுது போக்குபவர், ஓய்வு எடுப்பவர், விடுமுறை பொழுது போக்குபவர் எனலாம். சிலர் வாரமுழுவதும் உழைத்துவிட்டு வாரக் கடைசியில் அதாவது சனி, ஞாயிறு கிழமைகளில் அண்டையூரில் உள்ள பொழுது போக்கு இடங்களுக்குச் செல்வர். சிலர் காலாண்டு, அரையாண்டு, கோடை விடுமுறைகளில் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பொழுது போக்குவர். சுற்றுலாப் பயணியையும் விடுமுறைப் பொழுது போக்கில்

ஈடுபடும் பணியையும் வேறுபடுத்தி அறிவது சற்றுக் கடினமான ஒன்றுதான்.

**வழித்தங்கல் பயணி (TRANSIT VISITOR)**

ஒரு பயணி தான் விரும்பும் நாட்டிற்குச் செல்ல ஒரே விமானத்தில் செல்ல இயலாது. எனவே அவர் சில விமான நிலையங்களில் தங்கி, அடுத்த விமானம் புறப்படும்வரை ஓய்வெடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்த இடைவெளி நேரத்தில் அவர் அந்நகரத்திற்குச் சென்று சுற்றிப்பார்க்கிறார். இவர்தான் வழித்தங்கல் பயணி ஆவார். எடுத்துக்காட்டாக பயணி ஒருவர் கோவையிலிருந்து அமெரிக்கா செல்கிறார். கோவையிலிருந்து ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் புறப்படும் அவர் பம்பாயில் இறங்கி, லண்டன் செல்லும் பிரிட்டீஷ் ஏர்வேஸ் விமானத்தில் மாறிச் செல்ல வேண்டும். லண்டன் புறப்பட ஆறுமணி நேர இடைவெளியுள்ளது. அவன் பம்பாய் நகரைச் சுற்றிப் பார்க்கிறான். அடுத்து விமானம் லண்டனில் இறங்குகிறது. லண்டன் விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவிற்கு விமானம் புறப்பட 9 மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே இந்த இடைவெளி நேரத்தில் அவர் லண்டனை சுற்றிப் பார்க்கிறார். இவர்தான் வழித்தங்கல் பயணி.

**எல்லை கடப்போர் (BORDER CROSSERS)**

ஒருநாட்டின் எல்லைப் பகுதிகளில் வசிப்போரில் பலர் ஒரே நாளுக்குள் அண்டை நாடுகளுக்குச் சென்று திரும்புவர். இவர்கள் எல்லை கடப்போர் என அழைக்கப்படுவர்.

**மகிழ்வுலா :** மகிழ்ச்சியூட்டும் பொழுது போக்கிற்காக குறுந்தூரம் பயணம் மேற்கொள்வதனை மகிழ்வுலா (PICNIC) என அழைக்கலாம்.

ஒரு சுற்றுலா மையத்தில் தங்கிப் பணிபுரிபவன் சுற்றுலாப் பயணி ஆகமாட்டான். காரணம் அவன் பிழைப்பிற்காக அங்கேயே தங்கியுள்ளான். எடுத்துக்காட்டாக ஊட்டிக் கல்லூரியில் பணிபுரியும் ஒரு பேராசிரியரைச் சுட்டலாம்.

<u>'சென்று திரும்புதல்'</u> என்பதுவே சுற்றுலாவின் முக்கியக் கருத்து. சுற்றுலாப் பயணி என்பவன் "சென்றேன்! கண்டேன்! மீண்டேன்!" எனும் வரையறைக்குள் இருத்தல் அவசியம்.

**இன்ப நோக்குப் பயணியர் - இன்ப நோக்கிலாப் பயணியர்**

அடுத்து பயணியரை இன்ப நோக்குப்பயணியர் என்றும், இன்ப நோக்கில்லாப் பயணியர் எனவும் இரு பிரிவாகப் பகுக்கலாம்.



மேற்கூறப்பட்ட நால்வரும் இன்ப நோக்குப் பயணியர் ஆவார். கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர், உறவினர் ஆகியோரைப் பார்க்கச் செல்பவர்கள் ஆகியோர் இன்ப நோக்கில்லாப் பயணியர் என அழைக்கப் பெறுகின்றனர். 'கருமமே கண்ணாயினார்' என்று கூறப்படுவது போல் இவர்கள் தமது தொழிலிலேயே கருத்தாக இருப்பர். பல இடங்களைச் சுற்றிப் பார்த்து இன்பம் காண்பதில் இவர்களுக்கு ஆர்வம் இருக்காது. இவர்களுள் நூற்றில் ஒருவர்தான் மகிழ்ச்சிக்காக இடைவெளி நேரத்தையும் பணத்தையும் செலவிடுவர்.

"அனைத்துப் பயணங்களும் சுற்றுலா அல்ல. ஆனால் அனைத்து சுற்றுலாக்களும் பயணங்கள் தாம்" என்பது சுற்றுலா பற்றிய பயன்மொழி.

## ஆ. சுற்றுலா மையம் சிறப்பதற்கான அடிப்படைக் கூறுபாடுகள்

## (சுற்றுலாவின் இயக்கவியல்)

## (MECHANICS OF TOURISM)

சுற்றுலா மையம் சிறப்படைய பயணியரைக் கவர்வதற்கான அடிப்படைக் கூறுபாடுகள் யாவை? என்பதனைக் காண்போம். சுற்றுலாவின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உதவும் அம்சங்களே இதன் அடிப்படைக் கூறுபாடுகள். இதனையே சுற்றுலாவின் இயக்கவியல் (Mechanics of Tourism) என்கிறோம். அதாவது மக்களைச் சுற்றுலா செல்வதற்குத் தூண்டும், கவர்ந்திழுக்கும், கவரும் அம்சங்களே இயக்கவியல் எனப்படும்.

ஒரு சுற்றுலா வெற்றிபெற வேண்டுமெனின்

1. அமைவிடம் (Locality)
2. போக்குவரத்து (Transport)
3. தங்குமிடம் அல்லது தங்கும் வசதி (Accommodation)

ஆகிய மூன்று அடிப்படை அம்சங்களும் இருத்தல் வேண்டும்.

அமைவிடம் என்பதனை சுற்றுலா மையம் (Tourist Centre) அல்லது இடத்தின் சிறப்பு என்றும் கொள்ளலாம். போக்குவரத்து என்பது போக்குவரத்து மார்க்கங்கள் மற்றும் வாகனங்களைக் குறிக்கும். இம்மூன்றும் சுற்றுலாவின் அடிப்படைக் கூறுபாடுகள் (Basic Components of Tourism) ஆகும்.

ஒரு சுற்றுலா மையம் அல்லது இடம், சுற்றுலா முக்கியத்துவம் பெற வேண்டுமெனில் அந்த இடம் ஏதாவது ஒரு வகையில் சிறப்பிடம் வகிக்க வேண்டும். ஒன்று பயணியரைக் கவரும் வரலாற்றுச் சின்னம் அங்கு இருக்க வேண்டும். அல்லது கவர்ச்சிமிக்க இயற்கை எழில் கொண்டதாக இருக்க வேண்டும். அல்லது புனிதத்தலமாக இருக்க வேண்டும். அந்த அமைவிடம் அருமையுடையதாக இருக்கலாம். அடுத்து பயணிகள் அந்த மையத்திற்கு வர நல்ல போக்குவரத்து வசதிகள் தேவை. எனவே போக்குவரத்து வசதிகளும் (கார், ரயில், ஆகாயவிமானம், ஹெலிகாப்டர்) சுற்றுலாவைச் சிறப்பிக்கத் தேவைப்படுகின்றன. சுற்றுலா முக்கியத்துவம் உள்ள ஓரிடத்தில் உண்ண, உடுக்க, தங்க, ஓய்வெடுக்கத் தக்க வசதிகள் நிறைந்த தங்கும் விடுதிகளும், உணவகங்களும் (Hotel) இருத்தல் அவசியமாகிறது. இம்மூன்று கூறுபாடுகளும் ஒரு சுற்றுலா மையத்தை வளம்பெறச் செய்கின்றன.

அமைவிடம், போக்குவரத்து, தங்குமிடம் ஆகிய மூன்றுடன் நான்காவதாக செயல்பாடுகள் என்பதைனைச் சேர்ப்பாரும் உண்டு. அவர்கள் இதனைக் கவர்ச்சி, அடையும் வழி, தங்குமிடம், செயல்பாடு (Attraction, Accesibility, accommodation, activities) என நான்காகக் கூறுவர்.

மேற்கூறப்பட்ட மூன்று அடிப்படைக் கூறுபாடுகளுடன் மேலும் வேறு சில சிறப்புக் கூறுகளும் சுற்றுலா மையத்தைச் சிறப்படையச் செய்கின்றன. அவற்றுள் 1. மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்ப நிலை, 2. கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இயற்கைக் காட்சிகள், 3. வரலாற்று-பண்பாட்டுப் பெருமை, 4. இனிய மனங்குளிரும் வாழ்க்கை வசதிகள் (amenities), 5. அவ்விடத்திற்கு எளிதில் செல்லக் கூடிய வசதி (Accessibility) ஆகியன மிகவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

### 1. மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்ப நிலை

இராபின்சன் எனும் அறிஞர் சுற்றுலா மையத்தின் சிறப்பு, பெரும்பாலும் அதன் புவியியல் அமைப்பு, தட்ப-வெப்பநிலை ஆகியவற்றைப் பொறுத்தே அமைந்துள்ளது எனச் செப்புவார். சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் உல்லாசமாக இன்பப் பொழுது போக்குவதற்காக கடற்கரை, குன்று, அருவி, ஏரி, விலங்குகள் நிறைந்த காடு, பள்ளத்தாக்கு, வரலாற்றுச் சின்னம் ஆகியவற்றைக் கண்டு களிக்கின்றனர். இவ்விடங்கள் இதமான மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்ப நிலையைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். அளவிற்கும் அதிகமான, தாங்கமுடியாத குளிரும், வெப்பமும் கொண்ட ஓரிடம், பயணிகளை ஈர்க்காமல, அவர்களை



வெறுப்படையச் செய்துவிடும். மேலும் இடைவிடாது பெய்யும் மழை, சுற்றுலாவைக் கெடுத்துவிடும். கடற்கரைகளின் இளம் வெயிலும், மிதமான தட்பவெப்பமும், இதமான குளிர்த் தென்றலும் கோடிக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைத் தன்பால் ஈர்க்கின்றன. பயணிகள் இதமான தட்பவெப்பத்தால் ஈர்க்கப்படுவதனைக் கருத்தில் கொண்டே, பல நாடுகள் கடலோரப் பகுதிகளில் மருந்தூற்று மையங்களையும் (Spaas), ஓய்விடங்களையும் (Resorts) உருவாக்கியுள்ளன. குளிர்ப் பிரதேசங்களில் வாழ்வோர் வெப்பப் பகுதிகளையும், வெப்பப் பகுதியில் வாழ்வோர் குளிர்ப் பகுதிகளையும் பார்த்து மகிழ, சுற்றுலாச் செல்வது கோடை வெயிலின் கொடுமையைப் போக்கிக் குளுமை தேடிப் பலர் கோடை வாசஸ்தலங்களை நாடிச் செல்கின்றனர். கவின்மிகு கடற்கரையைத் தன்னகத்தே கொண்டுள்ள அனைத்து நாடுகளும் குறிப்பாக அதிலும் சிறப்பாக பிரான்சு, சிரியா, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ஆஸ்திரேலியா, தாய்லாந்து, ஹவாய் தீவுகள், கிரீஸ் முதலானவை இதமான கடலோரப் பொழுதுபோக்கு மையங்களை அமைத்துள்ளன. பனி மிகுந்த நாடுகள் பல பனிச்சறுக்கு முதலான பனிக்கால பொழுதுபோக்கு விளையாட்டு வசதிகளை உருவாக்கி, பல பகுதிகளைப் பனிக்கால விடுமுறைப் பொழுதுபோக்கு மையங்களாகச் சீர்படுத்தி, லட்சக் கணக்கில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. ஆகவே ஓரிடத்தின் இதமான, மிதமான தட்பவெப்பநிலை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்திழுக்கின்றது.

### 2. கவின்மிகு இயற்கைக் காட்சிகள்

உயர்ந்த மலைகளும், நீர்வீழ்ச்சிகளும், ஓடிவரும் ஆறுகளும், தாமரைத் தடாகங்களும், கடலெனத் திகழும் ஏரிகளும், பசுமை நிறைந்த காடுகளும், மணங்கமழும் பூங்காக்களும், பள்ளத்தாக்குகளும், பனி மண்டலங்களும், கவின்மிகு கடற்கரைகளும் மற்றும் இயற்கை அன்னையின் பல்வேறு கோலங்களும் பயணிகளைக் கட்டியிழுக்கும் கவர்ச்சிப் பாவைகளே ஆகும். இத்தகைய இயற்கையின் அதி அற்புதப் படைப்புகளாக விளங்கும் நயாகரா நீர்வீழ்ச்சி, மியாமி, சிரியா நாட்டின் ஹோம்ஸ் நகரத்திற்கு 200 கி.மீ தொலைவில் உள்ள தர்த்தூஸ், லடாக்கியா கடற்கரை இல்லங்கள், மெரினா, கோவா, கோவளம்-கடற்கரைகள், காஷ்மீரத்தின் எழிலார்ந்த ஏரிகள், பனிபடர்ந்த இமயம், ஆல்ப்ஸ் மலைகள்-ஐஸ்லாந்தின் வெப்பமிகு வெந்நீர் ஊற்றுகள், ஆப்பிரிக்கக் காடுகள், பொங்கிவரும் கங்கை, அமேசான், மிசௌரி, மிசிசிபி ஆறுகள் முதலானவைச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் காந்தங்கள் ஆகும்.

**3. வரலாற்றுப் - பண்பாட்டுப் பெருமைகள்**

தொன்மைச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும், பண்பாட்டுப் புகழும் கொண்ட இடங்களைப் பார்த்து மகிழ்வதில் சுற்றுலாப் பயணியர்க்குத் தணியாத ஆர்வம் உண்டு. இடிந்த கோட்டைக் கொத்தளங்களும், பாழடைந்த கோயில்களும் தரைமட்டமான அரண்மனைகளும், உடைந்த சிற்பங்களும், அழிந்த நகரங்களும், மங்கிய பழமை மிக்க ஓவியங்களும் கடந்தகால வரலாற்றை எடுத்தியம்பும் நினைவுச் சின்னங்களாகும். இவை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்திழுக்கின்றன. பழமையுடன் வரலாற்றுப் பெருமையும், பண்பாட்டுச் சிறப்பும் கொண்டு திகழும் உரோம், பாரிஸ், லண்டன், டெல்லி, லெனின் கிராடு, பாக்தாத் முதலான பெரு நகரங்களைக் காண, ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் போட்டி போட்டுக் கொண்டு செல்வதனைக் காணலாம்.

சலவைக்கல் கனவாகவும், உலக அதிசயங்களில் ஒன்றாகவும், காதல் இலக்கியமாகவும் திகழும் தாஜ்மகாலையும், சாய்ந்து கொண்டே ஆனால் இன்று வரை விழாதிருக்கும் பைசா நகரக் கோபுரத்தையும் திறந்தவெளி அருங்காட்சியகமாகத் திகழும் மாமல்லபுரத்தையும், கலையெழில் மிக்க தஞ்சைப் பெரிய கோயிலையும், இன்றுவரை துருப்பிடிக்காமல் டெல்லியில் நிற்கும் பழைமை மிக்க இரும்புத்தூணையும், டெல்லியை ஆண்ட அடிமை வமிசத்தினரின் நெடிய குதுப்மினாரையும், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையையும் காண விழையும் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை நாள்தோறும் கூடிக்கொண்டே இருப்பதனைக் காணலாம்.

ஆதிச்ச நல்லூர், அழகன்குளம், அரிக்கமேடு, பூம்புகார், கரூர், தோலவீரா முதலான அகழாய்வுப் பகுதிகளும் கலாசாரச் சுற்றுலாவில் (Cultural Tourism) ஆர்வம் கொண்டோரைக் கவர்கின்றன. வேலூர், பாஞ்சாலங்குறிச்சி, கிருஷ்ணகிரி, செஞ்சி, சீரங்கப்பட்டணக் கோட்டைகளும் பயணியர் விரும்பிப் பார்க்கும் இடங்களாகும். ஜெய்ப்பூர்க் கோட்டை, அரண்மனைகளும் அயல் நாட்டினரால் விரும்பிப் பார்க்கப்படுகின்றன.

**4. எளிதாகச் சென்றடையும் தன்மை**

சுற்றுலா மையங்கள் மக்கள் எளிதில் சென்று அடையும் வண்ணம் இருத்தல் வேண்டும். தமிழகத்தின் குடைவரைக் கோயில்களுள்



சிறப்பானது மலையடிக்குறிச்சிக் குடைவரை. முத்தமிழ் வளர்த்த முத்தரையரின் கலை வண்ணத்தில் மலர்ந்த இரட்டைக் குடைவரை இங்குள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மலையடிக்குறிச்சிக்குச் சரியான பஸ் வசதியில்லாததால், பயணிகளைத் தன்பால் ஈர்க்க முடியவில்லை. குறைந்த செலவில் எளிதாகச் சென்று அடைய முடியாததால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் நம் நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களைப் பார்வையிடுவதில்லை. எனவே சுற்றுலா மையம் புகழ்பெற, பல பயணிகளைத் தன்பால் ஈர்க்க, அவ்விடத்தினை எளிதாக அடையத்தக்க போக்குவரத்து வசதிகள் இன்றியமையா தனவாகும்.

**5. இனிய மனங்குளிரும் வாழ்க்கை வசதிகள்:**

சுற்றுலா மையத்தில் பயணிகள் உல்லாசமாகப் பொழுது போக்கப் பலவிதமான, இதமான வாழ்க்கை வசதிகள் இருத்தல் வேண்டும். அம்மையம் அன்றாட வாழ்வின் இன்றியமையா வசதிகளையும், ஆடம்பர வசதிகளையும், பலவிதமான பொழுதுபோக்கு, கேளிக்கை வாய்ப்பு களையும், வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும். இவை இரு வகைப்படும். ஒன்று இயற்கையிலேயே அமைந்தவை. அடுத்தது மனிதனால் உருவாக்கப்படுபவை. சூரியனின் தோற்றம், மறைவு, கடல் குளியல், வெயில் குளியல், மீன் பிடித்தல், நீர்ச்சறுக்கு, மலையேறல், வெந்நீர் ஊற்றில் குளித்தல், இவை அனைத்தும் இயற்கை நமக்களித்த நன்கொடைகள். ஆனால் நாடகம், கூத்து, இசை, கேளிக்கை நிகழ்ச்சிகள், நீந்து குளங்கள், விளையாட்டு அரங்குகள், படகுப் பந்தயங்கள், படகு வீடுகள், உல்லாச விடுதிகள், அறுசுவை உணவுகள், பானங்கள் இவை மனிதனால் படைக்கப்படுபவை. மேற்கூறப்பட்ட வசதிகள் இருப்பின் சுற்றுலாப் பயணிகள் அம்மையத்திற்கு அதிக அளவில் விரும்பிச் செல்வதுண்டு.

**6. உல்லாசத் தங்கும் விடுதிகள்**

சுற்றுலா மையம் சிறப்புற, அனைத்து வசதிகளுடன் கூடிய தங்குமிடங்கள் அத்தியாவசியத் தேவை. உல்லாசமாகப் பொழுதினைக் கழிக்க சுற்றுலா மையங்களை நாடிச் செல்லும் பயணியர் தாம் தங்கி ஓய்வெடுக்க, உண்ண, உறங்க இரம்மியமான விடுதிகளை நாடுகின்றனர். பெரும் பணக்காரர்கள் நட்சத்திர மதிப்புடைய இல்லங்களில் அனைத்து வசதிகளுடன் தங்க முனைகின்றனர். அதே நேரத்தில் கடலோர மகிழ்விடங்களில் தங்குபவர்கள் புதுமையான, எளிமையான, இயற்கை

சார்ந்தகுடில்களில் (Cottages) தங்குவதில் இன்பம் காண்கின்றனர். காரணம் அவர்கள் ஆடம்பரமான தமது மாளிகைகளில் நாள்தோறும் தங்கி அலுத்தவர்கள். எனவே அவர்கள் மாற்றுச் சூழலில் தங்குவதில் பேரின்பம் காண்கின்றனர். அவித்த கடலையும், சுட்ட மீனும், பதநீரும்-அவர்கட்குப் புதுமை கலந்த மகிழ்வைத் தருகின்றன. பதமான உணவுப் பொருட்களை இதமான முறையில் பயணிகளுக்கு வழங்குவது அவர்களை மகிழ்விக்கின்றன. எனவே பயணிகளின் விருப்பத்திற்கேற்ப தங்கும் விடுதிகளும் உண்ணும் உணவு வகைகளும் சுற்றுலா மையத்தில் கிடைத்தல் சிறப்பிற்குரியது. இவ்வகையில் ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து, ஆஸ்திரியா, பெல்ஜியம் - முதலான நாடுகள் முன்னணியில் உள்ளன.

**7. மக்களின் நற்பண்புகள், வழிகாட்டி, தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் பிற**

ஒரு நாட்டின் அமைதியான அரசியல் சூழல், மக்களின் தோழமை உணர்வு, பிறர்க்குதவும் பண்பு, விருந்தோம்பும் பண்பு, நேர்மை, நாணயம், அயல் நாட்டினரை அன்புடன் நடத்தும் பாங்கு போன்ற இன்னோரன்ன பண்புகள், ஒரு நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன. நமது நாட்டைப் பற்றியும், பாரம்பரியப் பண்பாடு, வரலாற்றுப் பெருமை, மொழி, நகரச் சிறப்பு போன்றவற்றைப் பற்றியும் அறிந்திராத அயல்நாட்டுப் பயணிகளுக்கு பண்பு மிக்க வழிகாட்டிகளும் (Tourist guides). சுற்றுலாத் தகவல் நிறுவனங்களும், உரிய முறையில் உதவி புரிதல் வேண்டும். அத்துடன் வெளிநாட்டுப் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள், ஓரளவிற்கு எளிதாக்கப் படுதலும், விசா, கட்டுப்பாடு, போன்றவற்றில் தாராளக் கொள்கையும் சுற்றுலாவைச் செழிக்கச் செய்யும். இவ்வகையில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிறந்த வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியரை அகங்குளிர வரவேற்று, கனிவுடனும் அன்புடனும் பேசி உபசரித்தல் மிகவும் அவசியம். மனநிறைவுடன் திரும்பும் அயல்நாட்டுப் பயணி பிறரையும் நம் நாட்டிற்கு வர ஊக்குவிப்பார். தகவல் தொடர்பு மையங்களை நிறுவுவதும், சுற்றுலாப் பயணியரைக் கவரும்.

இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் அதிகரித்துள்ளனர். சுற்றுலா வளர்ச்சியால் நாம் அன்னியப் பயணிகளை அதிக அளவில் கவர முடியும். அதிக அன்னியச் செலாவணியைப் பெறமுடியும். இதனால் உலக அரங்கில் நம் நாட்டின் பெயரும் புகழும் உயரும் என்பதில் ஐயமில்லை.



## இ. சுற்றுலா உள்நோக்கங்கள் (Motivation for Travel)

"ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போவாரா ?" என்னும் முதுமொழி நம்நாட்டில் நிலவுகிறது. அதாவது ஏதோ ஒரு உள்நோக்கத்தை மனதிற்கொண்டுதான் அவர் ஆற்றில் சென்றார்.

ஒவ்வொரு தொழிலுக்கும் செயலுக்கும் நோக்கம் உண்டு. உலகின் கண் நடைபெறும் அனைத்து செயல்களுக்கும் ஏதாவது ஒரு நோக்கம் உண்டு. ஆனால் இந்நோக்கங்கள் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. இது அவரவர் விருப்பத்தைப் பொருத்து அமைகிறது. எடுத்துக்காட்டாகச் சிலர் விளையாட்டின் மீதுள்ள வெறி அல்லது பேரார்வத்தின் காரணமாக, விளையாட்டுப் போட்டிகள் எங்கு நடந்தாலும் அவற்றைப் பார்த்து ரசித்தால் தான் நிம்மதி அடைவர். சிலருக்கு விளையாட்டு என்றாலே பிடிக்காது. எனவே சுற்றுலா செல்வதன் நோக்கம் காலத்திற்குக்காலம் வயதிற்கு வயது மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது என்பதனை அறியலாம்.

மனிதனின் செயல் ஒவ்வொன்றுக்கும் ஏதாவது காரணம் அல்லது உள்நோக்கம் இருக்கும் என்று உளவியல் வல்லுநர்கள் கருதுவர். ஒருவன் கோயிலுக்குப் போகிறான் என்றால் பக்தியோ, செய்த பாவத்திற்கு மன்னிப்புப் பெறுவதோ, மறுமையில் சுவர்க்க சுகங்களை அனுபவிப்பதோ, ஏதோ ஒரு காரணம் அல்லது உள் நோக்கம் இருக்கலாம். சிலர் பயணங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள். சிலர் காட்டுவதில்லை. ஏன் ? ஒரு குறிப்பிட்ட நாட்டில், இன்னொரு நாட்டைவிட அதிகமான மக்கள் சுற்றுலாவில் ஈடுபடுகின்றனர். அது ஏன் ? இப்படி சுற்றுலாவுக்கான காரண காரியங்களையும், உள் நோக்கங்களையும் உளவியல் வல்லுநர்கள் ஆராய்ந்தனர். பொதுவாக, மனிதர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங் களுக்காகப் பயணம் செய்கிறார்கள். பல உள் நோக்கங்கள் ஒன்று கூடுவதின் விளைவாகவே சுற்றுலா எனும் முடிவுக்கு வந்தார்கள். சுற்றுலாக்களுக்கான உள் நோக்கங்களில் முக்கியமானவற்றை மகின்டோஷ், கிராப்ஃ போன்ற வல்லுநர்கள் தொகுத்துத் தந்துள்ளார்கள்.

**1. இன்ப விழைவு**

மக்கள் அன்றாடப் பணிகளை இயந்திரம் போல் செய்து அலுப்பும், சலிப்பும் அடைகின்றனர். விளையாட்டு, வேடிக்கை, கேளிக்கை போன்றவற்றில் விருப்பம் கொள்கின்றனர். அவற்றைக் கண்டு களிக்கவும்

அவற்றில் கலந்து மகிழவும், சுற்றுலா செல்கின்றனர். புத்துணர்ச்சி பெறுகின்றனர்.

**2. இளைப்பாறுதல், ஓய்வு, பொழுதுபோக்கு**

எங்கும் தொழில் வளர்ச்சியும், நகர வளர்ச்சியும் ஏற்பட்டு வருகின்றன. போட்டி மிகுந்த இவ்வுலகில் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது, பரபரப்பாக இயங்க வேண்டியுள்ளது. இதனால் உடலிலும் உள்ளத்திலும் சோர்வும், களைப்பும் ஏற்படுகின்றன. இவற்றிலிருந்து விடுபட்டு, அமைதியும், ஆரோக்கியமும் நிறைந்த சூழலில் ஓய்வெடுத்து, இளைப்பாறி, புத்துணர்வு பெற சுற்றுலாவின் துணையை நாடுகிறார்கள். இளைப்பாறுவதற்குச் சிலருக்குச் சூழல் மாற்றமே போதுமானதாக இருக்கிறது. சிலருக்கு வெயில் குளியல், கடல் குளியல், ஓய்விடங்களில் கிடைக்கும் கேளிக்கைகள், விளையாட்டுக்கள், வேடிக்கைகள், பொழுது போக்குகள் தேவைப்படுகின்றன. சிலர் புது இடங்களைக் காண்பதில் மற்றும் புதியவர்களைச் சந்திப்பதில், புதிய அனுபவங்களை அடைதலில், இளைப்பாறுதல் பெறுகிறார்கள்.

**3. உடல்நலம் பேணுதல்**

தூய்மையான காற்றும், சூரிய வெளிச்சமும் மனிதனின் உடல் நலத்திற்கு அவசியம். உடல்நலம் பேணும் நோக்கத்துடனேயே உரோமானியர்கள் மருந்து நீருற்று ஓய்விடங்களை அமைத்தார்கள்; உடல் நல விடுதிகள் (Health Resorts) பல ஸ்விட்சர்லாந்தில் நிறுவப்பட்டன. ஐரோப்பாவில் ஏராளமானவர்கள் மருத்துவக் குளியல்களுக்காகவும், சிகிச்சைக்காகவும் மருந்து நீருற்று ஓய்விடங்களுக்கும் உடல் நல விடுதிகளுக்கும் பயணம் செய்கிறார்கள். சோவியத் யூனியனில் கருங்கடல் கரையோரப் பகுதிகளிலும் காகஸஸ் மலை அடிவாரத்திலும் எண்ணற்ற உலகப் புகழ்பெற்ற உடல்நல விடுதிகளை நிறுவியுள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான சோவியத் மக்களும் அயல்நாட்டுப் பயணிகளும் அங்கு சென்று உடல் நலத்தைப் பேணிக் கொள்கிறார்கள்.

உடல் நலம் குன்றியவர்களும், உடல்நலத்தை நன்கு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடனும் சிலர் காஷ்மீர், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, மியாமி கடற்கரை, சுவிட்சர்லாந்து போன்ற இடங்களுக்குச் சுற்றுலா மேற் கொள்கின்றனர். குற்றால அருவியில் நீராடலும் உடல்நலம் பேணும் சுற்றுலாவில் அடங்கும்.



**4. விளையாட்டு ஆர்வம்**

விளையாட்டுக்களிலும், போட்டிகளிலும் கலந்து கொள்ளுதல் மனிதனின் பொழுது போக்குகளில் ஒன்று. எனவே பலர் விளையாட்டுகளிலும் உடற்பயிற்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் ஆர்வத்துடன் பல இடங்களுக்குச் சுற்றுலா செல்கிறார்கள். மலையேறுதல், பனிச் சறுக்கு, படகோட்டுதல், மீன்பிடித்தல், நடைப்பயணம், நீர்ச் சறுக்கு போன்ற பல்வேறு விளையாட்டுகளிலும், உடற்பயிற்சிகளிலும் ஆண்டுக்குஆண்டு அதிகமான பயணிகள் பங்கேற்று வருகிறார்கள். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் போன்ற பிரம்மாண்டமான விளையாட்டு விழாக்கள் நான்கு திசைகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றன.

**5. சமய ஆன்மிக உணர்வு**

பண்டைக்காலத்திலிருந்தே மக்கள் பயணம் செய்வதற்கு ஆன்மிக உணர்வு காரணமாக இருந்திருக்கிறது. சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு எண்ணற்றவர்கள் புனிதப் பயணம் போகிறார்கள். கிறிஸ்தவர்கள் ஜெருசலேத்திற்கும், வாடிகனுக்கும், முஸ்லீம்கள் மெக்கா, மதீனாவுக்கும், இந்துக்கள் காசி, இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்கும் சென்று வழிபடுகிறார்கள். புத்த சமயம் பிறந்த பூமியான இந்தியாவிற்கு உலகெங்கிலுமிருந்து இன்றும் பௌத்தர்கள் திரண்டு வருகிறார்கள். சமய விழாக்களும், பண்டிகைகளும் ஆன்மீக மாநாடுகளும் கருத்தரங்குகளும் திரளான பயணிகளைத் திரட்டுகின்றன. ஆன்மீக நடைப் பயணங்கள் இன்று மிகுந்து, பக்தகோடிகள் பலர் பழனிக்கு நடந்தே செல்கின்றனர்.

**6. கலாச்சார அறிவார்வம்**

வரலாற்றுக் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குப் பயணம் செய்வதில் ஏராளமானவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். நவீன காலத்தினின்று மாறுபட்ட பண்டைக்கால நினைவுச் சின்னங்களை, கட்டிடங்களை, சிற்பங்களை, ஓவியங்களைக் கண்டு களித்து, அறிவையும் பெருக்கிக் கொள்கிறார்கள். கலைவிழாக்கள், இசை விழாக்கள், திருவிழாக்கள் போன்ற கலாச்சார விழாக்களையும், பிற கலாச்சார சிறப்புக்களையும் காணும் விருப்பமும் சுற்றுலாச் செல்ல ஊக்குவிக்கின்றன.

**7. குடும்பத் தொடர்புகள்**

நண்பர்களையும் உறவினர்களையும் பார்ப்பதற்குப் பலர் பல இடங்களுக்குப் பயணம் செய்கிறார்கள். ஏராளமான அமெரிக்கர்கள்

அவர்களது முதாதையரின் பிறந்த பூமியைக் காணவும் அங்குள்ள உற்றார் உறவினருடன் அளவளாவவும் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வருகிறார்கள். பலர் சுற்றுலாவின் போது புதிய நண்பர்களையும் புதியவர்கள் தொடர்பையும் பெறுகிறார்கள்.

**8. அந்தஸ்தும், கௌரவமும்**

சிலர் தன்முனைப்பு உணர்வு (Egoism) காரணமாக சுற்றுலா மேற்கொள்கின்றனர். பல இடங்களுக்கும், அயல்நாடுகளுக்கும் சென்று வருவது தங்கள் அந்தஸ்தையும், கௌரவத்தையும் உயர்த்தும் என்று எண்ணுகிறார்கள். தங்கள் அயல் நாட்டு அனுபவங்களைப் பிறருக்குக் கூறிப் பெருமைப்படுவதில் பலர் இன்பம் காண்கிறார்கள். இது வீண் பெருமை என்ற போதிலும் சிலர் இதனை விரும்புகின்றனர்.

**9. தொழில் அல்லது வணிக நோக்கம்**

தங்கள் தொழில் அல்லது வணிகத்தின் நிமித்தம் பிற நாட்டு நிலவரங்களைக் கண்டறியப் பலர் பயணம் செய்கின்றனர். அதன் தொடர்பான மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், கண்காட்சிகளிலும் கலந்து கொள்வது பிரபலமடைந்து வருகிறது. பல நாடுகளில் பன்னாட்டு மாநாடுகளை நடத்துவதற்கென்றே அனைத்து வசதிகளும் அடங்கிய பிரம்மாண்டமான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் கலந்துகொள்ள வருவோரில் சிலர் தொழிற்பணியில் மட்டும் கவனம் செலுத்தினாலும் பெரும்பாலோர் தொழிலோடு சுற்றுலா இன்பத்தையும் இணைத்துக் கொள்கின்றனர். இதனால் இவர்கள் ஒரு கல்லால் இரண்டு மாங்காய் அடிக்கின்றனர்.

**10. கல்வி, அறிவியல், ஆய்வு நாட்டம்**

சிலர் கல்வித் தொடர்பான, அறிவியல் தொடர்பான," தமது ஆய்விற்குத் தொடர்புடைய இடங்களுக்கும் சுற்றுலா சென்று, தமது கல்வியறிவைப் பெருக்கிக்கொள்ளவும் விழைகின்றனர். இதன் காரணமாக தும்பா ராக்கெட் ஏவுதளம், கல்கத்தா பிளேனடோரியம், அறிவியல் நகரம், புதுடெல்லி முதலான இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா செல்வர். பல நகரங்களில் நடைபெறும் கருத்தரங்குகள், மாநாடுகள், பணிப்பட்டறைகள் ஆகியவற்றிற்கும் இவர்கள் செல்கின்றனர். உயர் படிப்பிற்காக அயல் நாடுகளுக்குச் சுற்றலா செல்வோரும் உள.




**11. வணிக ஊக்குவிப்பு**

வணிகம், தொழில், ஆகியவற்றை விருத்தி செய்யும் நோக்கத்துடனும் சுற்றுலா செல்லலாம். இதனை வணிகச் சுற்றுலா அல்லது தொழில் சுற்றுலா எனலாம். கைத்தறித்துணி, பனியன், ஏற்றுமதி செய்யும் முதலாளிகள் தமது தொழிலை மேம்படுத்தவும் புதிய தொழில் நுட்பங்களைக் கண்டறியவும் அயல் நாடுகளுக்குச் சுற்றுலா மேற்கொள்வதனை நாமறிவோம். இச்சுற்றுலா வணிக நோக்கம் கொண்டது.

சில தொழில் அதிபர்கள் தமது உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்யும் விற்பனையாளர்களை ஊக்குவித்தற் பொருட்டும் அயல் நாடுகளுக்குச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கின்றனர். **இது ஊக்குவிப்புச் சுற்றுலாவாகும்.**

தேசிய வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடனும், அன்னியச் செலாவணியை ஈட்டும் நோக்கத்துடனும் ஒவ்வொரு நாடும் சுற்றுலாவை மேம்படுத்துகின்றன.

இவ்வாறு பல காரணங்களுக்காக மக்கள் பயணம் செய்கின்றனர். வசதியும், ஓய்வும் நிறையக் கிடைக்கும் நாட்டினர், சுற்றுலாவில் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர். மற்ற நாட்டினர் அந்த அளவுக்கு ஈடுபாடு கொள்வதில்லை. அண்மைக் காலத்தில் சுற்றுலா அதிக எண்ணிக்கையில் பயணியரைக் கவர்கின்றது.



தஞ்சைப் பெருவுடையார் கோயில்

# 2. சுற்றுலாவின் வகைகள்
# (TYPES OF TOURISM)

**முன்னுரை :** தற்காலத்தில் சுற்றுலா மக்களிடையே பெருஞ் செல்வாக்கு பெற்றுள்ளது. இது ஒரு தொழில், புகையில்லாத தொழில்துறை (Smokeless Industry). சுற்றுலா வாணிகம் ஒரு நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்து, செலுத்துதல் சமநிலையை (Balance of Payment) எய்த உதவுகிறது. எனவே இன்று அனைத்து நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு, சுற்றுலாவை மேம்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்துகின்றன. சுற்றுலா பல வகைப்பட்டது. நோக்கம், தன்மை, இடம், தூரம், பயன்பாடு, தங்குகின்ற காலம் - ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா பல வகையினவாகப் பகுக்கப்படுகின்றது.

பொதுவாகச் சுற்றுலாவை நாம் (அ) உள்நாட்டுச் சுற்றுலா (Domestic Tourism or Internal Tourism) (ஆ) அயல் நாட்டுச் சுற்றுலா (Foreign Tourism) என இருவகையாகப் பகுக்கிறோம். அயல்நாட்டுச் சுற்றுலாவைப் பன்னாட்டுச் சுற்றுலா (International Tourism) எனவும் அழைக்கலாம். இனி, சுற்றுலாவின் வகைககளைப் பற்றிக் காண்போம்.

## 1. உள்நாட்டுச் சுற்றுலா (Domestic Tourism)

ஒரு நாட்டில் வாழும் மக்கள் தமது நாட்டிற்குள்ளேயே சுற்றுப்பயணம் செய்வது உள்நாட்டுச் சுற்றுலாவாகும். இது சிக்கனமானது; எளிதானது; சிக்கல்கள் அற்றது. உள்நாட்டுச் சுற்றுலா, தேசியச் சுற்றுலா அல்லது நாட்டுச் சுற்றுலா எனவும் அழைக்கப் பெறுகின்றது. சுற்றுலாப் பயணியருள் 90 சதவிகிதத்தினர் உள்நாட்டுச் சுற்றுலாவை மேற்கொள்வதாக உலகச் சுற்றுலாக் கழகப்புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.



இப்பயணியர் பெரும்பாலும் இன்பப் பொழுது போக்கு, இறைவழிபாடு, விடுமுறை, உடல் நலன், கல்வி, விளையாட்டுப் போட்டி வாணிபம் - போன்றவற்றின் அடிப்படையில்தான் பயணம் செய்வர். இதற்கு பாஸ்போர்ட், விசா, நாணய மாற்று, மொழி - முதலான சிக்கல்கள் எவையுமில்லை.

### அ). உள்நாட்டுச் சுற்றுலாவின் தன்மை

உள்நாட்டுச் சுற்றுலாவிற்கான தூரம் இதுகாறும் துல்லியமாக வரையறுக்கப்பட வில்லை. பொதுவாக 25 மைல் தொலைவிலிருந்து 100 மைல் தொலைவு வரை பயணம் செய்தலை உள்நாட்டுச் சுற்றுலா எனலாம். இவ்வரையறை நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. ஆஸ்திரேலியாவில் 25 மைல் பயணம் செய்பவர் உள்நாட்டுச் சுற்றுலாவில் கலந்து கொண்டதாகக் கருதப்படுகிறார். ஆனால் அமெரிக்காவிலோ உள்நாட்டுச் சுற்றுலாவின் குறைந்த அளவு பயண தூரம் 50 மைல்கள்.

பன்னாட்டுச் சுற்றுலா அமைப்பு (IUOTO) உள்நாட்டுச் சுற்றுலா பற்றிக் கீழ்க்காணும் விளக்கத்தைக் கூறுகின்றது.

"ஒரு நபர் தான் வாழும் இடத்தை விட்டு, தன்னாட்டிற்குள்ளேயே , வேறு இடத்திற்குப் பயணம் சென்று, எந்தவித பணவருவாயுமின்றி, தான் தங்குமிடங்களில் 24 மணிநேரம் அல்லது ஒரு இரவு தங்கியிருப்பவர் உள்நாட்டுப் பயணி என அழைக்கப்படுபவார்".

இவ்விளக்கத்தில் பயண தூரத்தைப் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் காலத்தைப்பற்றிய குறிப்பு - அதாவது குறைந்தது 24 நேரம் தங்குதல் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனவே 24 மணி நேரத்திற்குக் குறைவான பயணம் உள்நாட்டுச் சுற்றுலா ஆகாது. உள்நாட்டுச் சுற்றுலாவில் குறைந்த செலவில் பல இயற்கையழகு மிக்க இடங்களையும் கவின்மிகு நினைவுச் சின்னங்களையும் கண்டு மகிழலாம்.

## 2. பன்னாட்டுச் சுற்றுலா (International Tourism)

ஒருவர் தனது தாய் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்குப் பயணம் செய்வது பன்னாட்டுச் சுற்றுலா அல்லது அயல் நாட்டுச் சுற்றுலா எனப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கு கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) தங்கும் உரிமை (விசா), ஆரோக்கியச் சான்றிதழ் முதலான ஆவணங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு ஆகாய விமானப் பயணம் பேருதவி புரிகின்றது. பன்னாட்டுச் சுற்றுலாவிற்கு ஏற்பாடுகள் செய்யப் பல பயண அலுவலகங்கள் உள்ளன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் பன்னாட்டுச் சுற்றுலாவில் பேரார்வம் காட்டுகின்றன. இவற்றுள் ஜெர்மனி முதலிடம் வகிக்கின்றது. பன்னாட்டுச் சுற்றுலா உலக மக்களிடையே

நல்லெண்ணத்தையும், நட்பையும் வளர்த்து, உலக அமைதிக்கு வழிகோலுகின்றது.

(கடவுச் சீட்டு, தங்கும் உரிமை பற்றிய செய்திகளைப் பயண ஆவணங்கள் எனும் தலைப்பில் விரிவாக்க் காணலாம்.)

பயணியரின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாவினை (அ) தனிநபர் சுற்றுலா (ஆ) குழுச் சுற்றுலா அல்லது மக்கள் சுற்றுலா (MASS TOURISM) என இருவகையாகப் பிரிக்கலாம்.

### 3. தனிநபர் சுற்றுலா (Individual Tourism)

ஒருவர் மட்டும் தனியாகச் சுற்றுலா மேற்கொள்வதனைத் தனிநபர் சுற்றுலா அல்லது தனிச் சுற்றுலா என்கிறோம். இதில் இவர் சுற்றுலாப் பயணத்திற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் தானே செய்து கொள்ள வேண்டும். சிலர் தனிச் சுற்றுலாவை விரும்புவர். இருப்பினும் இதில் கலகலப்போ, மகிழ்ச்சியோ இருக்காது.

### 4. குழுச் சுற்றுலா (Group Tourism)

ஒருவருக்கு மேற்பட்ட பயணிகள் குழுவாகச் சேர்ந்து, சுற்றுலா செல்வது குழுச் சுற்றுலாவாகும். அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டால், இதனை மக்கள் சுற்றுலா (Mass Tourism) எனவும் அழைப்பர். குழுச் சுற்றுலா மகிழ்ச்சியும் பாதுகாப்பும் நிறைந்தது; குறைந்த செலவில் பல இடங்களுக்கு வசதியாகச் சென்று திரும்பமுடிகிறது. இதனால் சகோதரத்துவமும் நட்பும் வளர்கிறது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழிலாளர்கள் - ஆகியோருக்கு இதுவே ஏற்றது; வசதியானது; சிரமங்கள் அற்றது. அரசாங்கம் ஆசிரியர்களுக்காக ரயிலில் கட்டணச் சலுகை அளிக்கிறது. இதனால் குறைந்த வருமானம் உள்ளவர்களும் தொலைதூர இடங்களுக்குச் சுற்றுலா மேற்கொள்ள இயலுகிறது.

அண்மைக் காலத்தில் குழுச் சுற்றுலா பலராலும் விரும்பப் படுகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இது மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. தனியார் நிறுவனங்கள் தங்களது தொழிலாளர்களுக்குச் சுற்றுலாச் செல்ல, சம்பளத்துடன் விடுமுறையும் பொருளுதவியும் புரிந்து வருகிறது. தனிநபர் சுற்றுலாவைக்காட்டிலும் குழுச் சுற்றுலா சிரமங்கள் அற்றது; மகிழ்ச்சிகரமானது.

### 5. பண்பாட்டுச் சுற்றுலா (Cultural Tourism)

பிற நாட்டு மக்கள் அவர்களது வரலாறு, நுண்கலைகள், தத்துவங்கள், பழக்க வழக்கங்கள் அயல்நாட்டு மக்களது பண்பாடு,



கல்விநிலை, அறிவியல் வளர்ச்சி - போன்றவற்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்படும் பயணமே பண்பாட்டுச் சுற்றுலா எனப்படும். ஒரு நாட்டு மக்களின் சமுதாய வாழ்க்கை, கலை, அருங்காட்சியகம், வரலாற்றுச் சின்னங்கள், நினைவுச் சின்னங்கள், திருக்கோயில்கள், கலை விழாக்கள், இசை, நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், திருவிழாக்கள் - ஆகியனவற்றைக் கண்டு களிப்பதே பண்பாட்டுச் சுற்றுலா. ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டைப் புரிந்து கொள்வதால் பன்னாட்டு உறவு வளரும்.

இந்தியா பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்கது; ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது. ஆன்மிகத் துறையில் உலகிற்கோர் வழிகாட்டியாகத் திகழ்வது. எனவே இந்தியாவில் கலாச்சார மையங்களுக்குப் பஞ்சமில்லை. நம் நாட்டின் கலாச்சார மையங்களுள் முக்கியமாகக் கருதத்தக்கவை -

1. அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா, சித்தன்னவாசல் - முதலான குடைவரைக்கோயில்கள்.

2. நாளந்தா, சாரநாத், கயா, குசி நகரம், காஞ்சிபுரம் - முதலான பௌத்தத் தலங்கள்.

3. கோவா, பாடலிபுத்திரம், ஹம்பி, பாதாமி, கஜுராஹோ, கொனாரக், புவனேசுவரம், சீரங்கம், பூரி, மதுரா, காசி, இராமேசுவரம், மதுரை, தஞ்சாவூர், ஆக்ரா - முதலான வரலாற்று முக்கியத்துவம் மிக்க பண்பாட்டு மையங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். (பண்பாட்டுச் சுற்றுலா - எனும் தனித் தலைப்பில் விரிவான செய்திகளைக் காணலாம்.)

### 6. கல்விச்சுற்றுலா (Educational Tourism):

அரியனவற்றை; பெரியனவற்றை; புதியனவற்றைக் காண வேண்டும்; தனது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும், ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் - எனும் தூய நோக்கத்துடன் செய்யும் பயணம் கல்விச் சுற்றுலா எனப்படும். அண்மையில் கல்விப்பாடத் திட்டத்தில் சுற்றுலாவும் ஒரு திட்டமாக, பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர்களும் மாணவர்களும் அறிவியல், புவியியல், கலை - முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்குச் சுற்றுலா செல்கின்றனர்.

கலை பயிலும் மாணவர்கள் தஞ்சாவூர், மாமல்லபுரம், கிருஷ்ணாபுரம், பேரூர், தாரமங்கலம், தாடிக்கொம்பு, ஹளபீடு, பேலூர், கஜுராஹோ முதலான கலைவளம் மிக்க இடங்களுக்கும், அறிவியல் மாணவர்கள் தும்பா ராக்கெட் ஏவுதளம், கோளரங்கம் (பிளானடோரியம்)

முதலான அறிவியல் சோலைகளுக்கும், தாவரவியல் மாணவர்கள், உதகமண்டலம், களக்காடு - முதலான தாவரப்பண்ணைகளுக்கும் - தங்கள் பாடங்களின் தொடர்பான கண்காட்சிகளுக்கும், கருத்தரங்குகளுக்கும் பணிப்பட்டறைகளுக்கும் (Work shops) செல்லுதல் கல்வியை மேம்படுத்தும். கல்விச் சுற்றுலாவின் மூலம் மாணவர்கள் நேரடிக் கல்விபெறும் வாய்ப்புள்ளது. தனிச்சிறப்புப் படிப்பு, மேல்படிப்பு - ஆகியவை மேற்கொள்ள கல்விச் சுற்றுலாவே தலைசிறந்தது. கீழ்க்காண்பன வற்றிற்காக மேற்கொள்ளப்படும் பயணங்கள் கல்விச் சுற்றுலாவில் அடங்கும்.

அ. அறிவியல் தொழில்நுட்ப மையங்கள்.

ஆ. புவியியல் முக்கியத்துவம் மிக்க இடங்கள்.

இ. வரலாற்றுச்சின்னங்கள், நினைவுச்சின்னங்கள்.

ஈ. பண்பாட்டு மையங்கள்.

உ. ஆய்வுக் கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள்.

ஊ. கலைக் கூடங்கள், அருங்காட்சியகங்கள்.
ஆவணக் காப்பகங்கள்

எ. மேற்பட்டப்படிப்பு, ஆய்வு, தனிச் சிறப்புப் பட்டம்.

## 7. சமூகச் சுற்றுலா (Social Tourism)

சுற்றுலாவிற்கான செலவினத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாவே, சமூகச் சுற்றுலா ஆகும். "சமூகத் தலையீடின்றி அதாவது அந்நபர் சார்ந்துள்ள சமூக நிறுவனத்தின் உதவியின்றி பயணம் செய்யமுடியாது" எனும் நிலையில் உள்ளவர்களே சமூகச் சுற்றுலாவில் ஈடுபடுவர். சில சமயங்களில் அரசாங்கமே முன்வந்து மக்கள் சுற்றுலா செல்வதற்கான வசதிகளையும், சலுகைகளையும் அளித்து, ஏற்பாடு செய்து தருவதே சமூகச் சுற்றுலாவாகும்.

எனவேதான் ஆண்ட்ர பாப்ளிமாண்ட் (ANDRA POPLIMONT) என்னும் அறிஞர் "சுற்றுலாவிற்கான செலவுகளைத்தான் சார்ந்திருக்கும் சமுதாய அமைப்புகளின் ஆதரவனுடனும், அவைகளின் உதவி பெற்றுக் கொண்டும் அமைத்துக் கொள்வதே சமுதாயச் சுற்றுலா" என வரையறுத்துள்ளார். அடுத்து

"சமூகச் சுற்றுலா என்பது குறைந்த வருவாய் உடையவர்கள், முழுவதும் மற்றவர்களின் ஆதரவுடனும், உதவியுடனும் பயணம்



செல்வதாகும்" என்று W. ஹன்சீகர் (Dr. W. HUNZIKER) சமூகச் சுற்றுலா பற்றிக் கூறியுள்ள கருத்தும் உற்று நோக்கத்தக்கது.

பொதுவாக உடலுழப்பை மட்டுமே நம்பியிருக்கும் குறைந்த வருவாய் பெறும் தொழிலாளர்கள் சுற்றுலா செல்வது சிரமம். எனவே அவர்களிடம் உள்ள சிறு சேமிப்புடன், தல நிறுவனங்களோ, தொழிற்சங்கங்களோ வழங்கும் பணத்தையும் சேர்த்து, சுற்றுலா செல்கின்றனர். பொதுவாக இத்தகைய சுற்றுலா, அத்தொழிலாளர் வாழும் இடத்திற்கு அப்பால் மாற்றுச் சுற்றுப்புறச் சூழல் கொண்ட இடமாக இருக்கும்.

**சம்பளத்துடன் கூடிய விடுமுறை (Paid Holidays)**

சுற்றுலா செல்ல விரும்பும் ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில், பல நாடுகளில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழைத் தொழிலாளியும் சுற்றுலா சென்று, புத்துணர்ச்சி பெற்று, பணியில் உத்வேகத்துடன் ஈடுபடமுடிகிறது.

பல்நாடுகள், குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் தங்களது தொழிலாளர்கள் சமூகச் சுற்றுலாவை மேற்கொள்ள உதவிகளைச் செய்து வருகின்றன. நம் நாட்டிலும் மத்திய, மாநில அரசுகள் தமது ஊழியர்களுக்கு விடுமுறைப் பயணச் சலுகைகளை (Leave travel Concession) அளித்து, குடும்பத்துடன் குதூகலத்துடன் சென்று வர ஏற்பாடுகள் செய்துள்ளன.

## 8. தொழில் சுற்றுலா (Business Tourism)

தற்காலத்தில் வணிகர்கள், தொழிலதிபர்கள் தங்களது தொழில், வாணிபம் தொடர்பாக அயல்நாடுகளுக்குப் பல மாநாடுகளில் கலந்து கொள்ளப் பயணம் மேற்கொள்கின்றனர். இம்மாநாடுகளில் தொழில் வல்லுநர்களும் கலந்து கொள்வதால், தொழிலதிபர்கள் பெரிதும் பயனடைகின்றனர். எனவே இவற்றின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இம்மாநாடுகளால் ஆடம்பர, சொகுசு ஓட்டல்கள் வளர்ந்து வருகின்றன. சில தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்திப் பொருள்களை அதிகம் விற்பனை செய்யும் கடை முதலாளிகளை, அயல்நாடுகளுக்குத் தமது செலவிலேயே அழைத்துச் செல்கின்றனர். எடுத்துக்காட்டாக டி.வி.எஸ்., நிறுவனம் தனது வண்டிகளை (டி.வி.எஸ்.50, டி.வி.எஸ்., சூப்பர், ஸ்போர்ட்ஸ், டிவிஎஸ் சுசூகி) அதிகம் விற்கும் விற்பனையாளர்களை அயல்நாட்டுச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வதைச் சுட்டலாம். தொழில் சுற்றுலாவினால் தொழில் விருத்தியடைகின்றன.

## 9. மருத்துவச் சுற்றுலா (Health Tourism)

எங்கும் எதிலும் கலப்படம். தண்ணீர், காற்று, உணவுப்பொருள் - ஆகிய அனைத்துமே கெட்டுவிட்டன; மாசடைந்து விட்டன. தொழிற்சாலைகளின் புகையும், கரியும் மோட்டார் வண்டிகளின் புகையும் மனிதனுக்குக் கேடு பயக்கின்றன. நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாக உள்ளது. சுற்றுப் புறச்சூழல் மாசடைந்து விடுவதால், பலர் இயற்கையான நல்ல காற்று கிடைக்கும் கடற்கரைகளுக்கும், பூங்காக்களுக்கும், அருவிகளுக்கும் செல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

சுற்றுப்புறச் சூழல்கள் ஆரோக்கியத்தைப் பாதிப்பதால் பலர் உடல் நலம் கெட்டு, உடல் நலன் பேண சுவிட்சர்லாந்து முதலான நாடுகளுக்குப் பயணம் செய்கின்றனர். கடற்கரைகள், வெந்நீர் ஊற்றுகள், ஆறுகள், மலைப் பகுதிகள் - ஆகிய இடங்களுக்கு உடல் நலம் பேணச் செல்லுதலே மருத்துவச் சுற்றுலாவாகும். குற்றால அருவியில் விழும் நீரில் பச்சிலை சாறு கலந்துள்ளது. இது உடல் நலத்திற்கு நல்லது. எனவே பலர் அங்கு நீராடச் செல்கின்றனர். செல்வர்கள் மத்திய தரைக் கடல், கருங்கடற்கரைப் பகுதிகளுக்கும் இதமான ஆல்ப்ஸ் மலைப் பகுதிகளுக்குச் செல்வதும் மருத்துவச் சுற்றுலாவேயாகும்.

## 10. இன்பச் சுற்றுலா (அல்லது) மகிழ்வுச் சுற்றுலா (Pleasure Tour)

சுற்றுலா மக்களுக்கு மகிழ்ச்சியை வழங்குகின்றது; இன்ப உணர்வைத் தருகின்றது. பயணியர் பலர் கோடை வெயிலைத் தணிக்க, குளு குளு உதகைக்குச் செல்கின்றனர். உள்நாட்டுச் சுற்றுலாவினர் பாதிக்குமேல் இன்ப நுகர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் மட்டுமே சுற்றுலா செல்கின்றனர். உலகப் புகழ்பெற்ற பாரிஸ், நியூயார்க், சிங்கப்பூர், ஹாங்காங், டோக்கியோ முதலான நகரங்களில் எழிலார்ந்த நடனம் கேளிக்கை, சூதாட்டம், பாப் இசை - ஆகியன இரவும் பகலும் நடைபெறுகின்றன. மகிழ்ச்சியாகப் பொழுது போக்கவே இவர்கள் இவ்விடங்களுக்குச் செல்கின்றனர்.

அண்மைக்கால ஆய்வின்படி அமெரிக்காவில், பன்னாட்டுச் சுற்றுலா செல்வோருள் 75 சதவீதமும், உள்நாட்டுச் சுற்றுலா செல்வோருள் 50 சதவீதமும் இன்ப நோக்குப் பயணியரேயாவர் புது மணமக்கள் தேன்நிலவிற்காகச் செல்வதும் இன்பச் சுற்றுலாவே என்பதனை நீங்கள் அறிவீர்கள்.



## 11. *அரசியல் சுற்றுலா* (Political Tourism)

தங்கள் நாட்டு அரசாங்க விழாவில் கலந்து கொள்ளச் செல்வது அரசியல் சுற்றுலாவாகும்.

## 12. *ஓய்வுச் சுற்றுலா* (Leisure Tourism)

அலுவலகத்தில் அல்லது தொழிற்கூடத்தில், பணி புரிந்து களைத்த போது, சுற்றுலா மேற்கொண்டு இளைப்பாறுதல் ஓய்வுச் சுற்றுலா. எடுத்துக்காட்டாக உள் அரங்கு விளையாட்டுகளில் கலந்து கொண்டு உற்சாகம் அடையலாம்.

## 13. *பருவகாலச் (கால நிலை) சுற்றுலா* (Monsoon Tourism)

சுற்றுலாப் பயணியர் தட்ப வெப்பநிலைக்கேற்ப சுற்றுலா மேற்கொள்வதைப் பருவ காலச் சுற்றுலா அல்லது காலநிலைச் சுற்றுலா என அழைக்கிறோம். குளிர்காலத்தில் வெது வெதுப்பான கடற்கரைப் பகுதிக்குச் செல்வதும் கோடையில் மலை வாழிடங்களுக்குச் செல்வதும் நலம் பயக்கும்.

நம் பாரதத்திற்கு அக்டோபர் முதல் மார்ச் வரை உள்ள காலக் கட்டத்தில் அயல் நாட்டுப் பயணியரின் வருகை அதிக அளவில் உள்ளது. ஆனால் பருவகாலங்களிலோ மிக மிகக் குறைந்து விடுகிறது. எனவே தான் இந்தியத் தொழில் இணையம் **(Confederation of Indian Industry)** பருவ காலச் சுற்றுலாவில் நாம் நாட்டம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. உலகச் சுற்றுலாவில் நம் பாரதத்தின் விகிதம் 0.4 சதவிகிதம் தான். இயற்கைக் காட்சி, சுற்றுச் சூழல், இதமான தட்டவெப்ப நிலை ஆகியவை நிறைந்த, எளிதில் அடையக் கூடிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்து சிறப்புப் பருவச் சுற்றுலாத் திட்டத்தை **(Special Monsoon Package)** அயல்நாட்டுப் பயணியர்க்கு அறிமுகப்படுத்த வேண்டும். கேரளம், மத்தியப்பிரதேசம், கர்நாடகம், கோவா, ஜம்மு காஷ்மீர், உத்தராஞ்சல், சிக்கிம், இமாசல பிரதேசம், ஒரிஸா ஆகிய மாநிலங்கள் இச்சுற்றுலாவிற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

**14. விடுமுறைச் சுற்றுலா (Holiday Tour)**

அன்றாடம் உழைத்துழைத்து அலுத்துப் போன தொழிலாளர்களும், அலுவலர்களும் அலுவலகப் பணியாளர்களும் சனி, ஞாயிறு விடுமுறைகளில் திசம்பர் விடுமுறைகளில், கோடை விடுமுறைகளில் தனியாகவோ குடும்பத்துடனோ வெளியூருக்குச் சென்று பொழுது போக்கிவிட்டு மறுமலர்ச்சியுடன் வீடு திரும்புவது விடுமுறைச் சுற்றுலாவாகும். மே மாத விடுமுறையில் பலர் வெளி மாநிலங்களுக்கும் டில்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர், மும்பை, சென்னை - முதலான இடங்களுக்கும் நீண்ட தோர் விடுமுறைச் சுற்றுலாவை மேற்கொள்வதும் உண்டு. (விடுமுறை நாள் சுற்றுலா எனும் தலைப்பில் விரிவான செய்திகள் தரப்பட்டுள்ளன.)

**15. விளையாட்டு மற்றும் துணிகரச் செயல் சுற்றுலா (Sports and Adventure Tourism)**

வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளவும் / பார்வையாளராகவும் அவை நடைபெறும் இடங்களுக்குச் செல்லுதல் விளையாட்டுச் சுற்றுலா எனப்படும். பண்டைக்காலத்தில் கிரேக்க வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள ஒலிம்பியா சென்றனர். முதல் ஒலிம்பிக் போட்டி கி.மு.776-இல் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறும்.

**கோல்ப் விளையாட்டு, சீமான்களைப் பெரிதும் கவர்ந்தது. இன்று தேசிய, ஆசிய, பன்னாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. உலக அளவில் லட்சக் கணக்கானோர் இதனைப் பார்த்து மகிழ்கின்றனர். கி.பி.2000 ஆண்டில் ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. 2012இல் லண்டனில் இப்போட்டி நடைபெற உள்ளது. இவற்றைக் காணச் செல்வதும் விளையாட்டுச் சுற்றுலாவே.**

துணிகரச் செயல்களில் தமது உயிரையும் பணயம் வைத்து அவற்றில் ஈடுபடுவோர் துணிகரச் செயல் சுற்றுலாவில் ஈடுபடுகின்றனர். பண்டைய கிரேக்கத்தில் பல வீரர்கள் சிங்கம், காளை - முதலான விலங்குகளை அடக்கும் போட்டிகளிலும் ஈடுபட்டனர். இவற்றை வேடிக்கை பார்க்கவும் ஆயிரக் கணக்கானோர் துணிகரச் சுற்றுலாவில் ஈடுபட்டனர். இன்றும் ஸ்விட்சர்லாந்தில் நடைபெறும் துணிகர விளையாட்டுக்களில் பங்கு கொள்ள / அவற்றை வேடிக்கை பார்க்க



ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கானோர் சுற்றுலா செல்கின்றனர். மலையேறுதலும் துணிகரச் செயலின் பாற்படும். நீர்ச்சறுக்கு விளையாட்டுகளிலும் இயந்திரத்தின் உதவியின்றி, இறக்கை கட்டிப் பறத்தல் (wind surfing) ஆகியவற்றிலும் பலர் ஈடுபடுகின்றனர். இவை அனைத்தும் துணிகரச் சுற்றுலாவே. இதனை அயல்நாட்டுப் பயணியர் அதிகம் விரும்புகின்றனர்.

**16. சமய, ஆன்மிகச் சுற்றுலா (Religious Tourism)**

பிற்பகுதியில் தனித்தலைப்பில் காண்க.

**17. சங்கச் சுற்றுலா**

சில நாடுகளில் அரசே பல சலுகைகளை வழங்கி, குறைந்த கட்டணத்தில் சங்கக் குழுக்களைச் சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருகின்றது. செல்ல வேண்டிய இடம், பார்க்க வேண்டியவை, தங்கவேண்டிய நாட்கள் - ஆகிய அனைத்தையும் அரசே முடிவெடுத்துச் செயல்படுத்துகின்றது. இதனைப் போன்ற சுற்றுலாக்களில் பயணியர்களுக்கு எவ்விதச் சிரமும் இருப்பதில்லை. சோவியத்ருஷ்யா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய பொதுவுடைமை நாடுகளும் இதுபோன்ற சங்கச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து வருகின்றன.

**18. ஈகோ - டூரிசம் (Eco - Tourism)**

அண்மைக் காலத்தில் உலகெங்கிலும் சுற்றுச் சூழல் சுற்றுலா மிக்க செல்வாக்கு பெற்றுள்ளது. கவின்மிகு இயற்கைச் சூழலைக் கொண்டுள்ள மிகக்குறைந்த வருவாய் பெறும் நாடுகள் இச்சுற்றுலாவை முன்னேற்றிப் பெரும் பொருள் சம்பாதிக்கின்றன. சபரிமலை - ஆரியங்காவுப் பகுதிகள், கொடைக்கானல், இமயமலைப் பகுதிகள் ஆகியன ஈ.கோ சுற்றுலாவிற்குச் சிறந்தவை. இன்று ஈக்வேடார் நாட்டின் அமேசான் பகுதியில் வசிக்கும் குவிச்சுவா இனமகைள (Quichua Communities in Ecuadorian Amazan) பலர் விரிவுபடுத்தப்பட்ட வாணிக வேளாண்மைக்குப் பதிலாக ஈகோ சுற்றுலாவை வளர்த்து வருகின்றனர்.

சுற்றுச்சூழல் கெடாதவாறு இச்சுற்றுலா நடைபெறுகிறது. Nature Tourism, Green Tourism, Responsible Tourism, Soft Tourism – எனும் பெயராலும் இது அழைக்கப்படுகிறது. இது மக்கள் சுற்றுலாவிற்கு மாற்றாக அமைந்துள்ளது. இதில் இயற்கைக் காட்சிகளைக்காண்பதில் பயணியர் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

**19. குளிர்காலச் சுற்றுலா – (Winter Tourism)**

குளிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவது குளிர்காலச் சுற்றுலாவாகும். இது ஐரோப்பிய நாடுகளில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது.

**20. சுற்றித்திரியும் சுற்றுலா – (Rolling Tourism)**

இதில் கலந்து கொள்ளும் பயணியர் மற்ற சுற்றுலாப் பயணிகளிலிருந்து வேறுபடுவர். இவர்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடைவெளியின்றி விரைவாக பயணம் மேற்கொள்வர். இவர்கள் பயணம் தொடர்ச்சியானதாகவே இருக்கும். இவர்கள் ஐந்து இரவுகளுக்குமேல் தொடர்ந்து ஓர் இடத்தில் தங்குவதில்லை.

**22. கடற்கரைச் சுற்றுலா – (Beach Tourism)**

பிற்பகுதியில் தனித் தலைப்பில் காண்க

**23. விண்வெளிச்சுற்றுலா – (Space Tourism)**

அண்மைக்காலத்தில் அறிமுகமான விண்வெளிச் சுற்றுலா கோடீஸ்வரர்களுக்கான அதி ஆடம்பரச் சுற்றுலா. இதனை அறிமுகப்படுத்திய பெருமை ரஷ்யாவைச் சாரும். அமெரிக்காவின் நாசாவுக்கு (ஹீஸ்டன் அருகே) இணையான ரஷ்யாவின் வான் வெளி மையம், விண்வெளியில் உள்ள தன்னாட்டு ஆய்வு மையத்திற்குச் சுற்றுலாப் பயணியரை அழைத்துச் செல்கிறது. அமெரிக்கக் கோடீஸ்வரர் டென்னிஸ் டிட்டோ என்பார் இதில் முதலில் பயணம் செய்தார். பல கோடீஸ்வரர்கள் ரஷ்யாவின் விண்வெளி ஆய்வு நிலையச் சுற்றுலாவில் பயணிக்கத் தம் பெயரைப் பதிவு செய்துள்ளனர். அமெரிக்காவும் விண்வெளிச் சுற்றுலாவிற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது. இதனால் சுற்றுலாவிற்குப் புதியதோர் பரிமாணம் கிடைத்துள்ளது.

காலநிலை, எல்லை, நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட பிரிவுகள் பகுக்கப்பட்டுள்ளன.

# 3. காலந்தோறும் சுற்றுலா
## (TOURISM THROUGH THE AGES)

### (சுற்றுலா வளர்ச்சி)

**முன்னுரை**

பயணம் என்பது இன்று நேற்று தோன்றியதன்று. மனிதன் தோன்றிய காலத்திலேயே பயணமும் தொடங்கியது எனக் கூறுதல் மிகையாகாது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே மனிதன் உணவு தேடிக் காடு மேடெல்லாம் அலைந்தான். பிற்கால மனிதன் திரைகடலோடியும் திரவியம் தேடினான். இன்றைய மனிதன் இன்பம் இறைவணக்கம், பொழுதுபோக்கு, அறிவு வளர்ச்சி, அரியனவற்றைக் கண்டு களித்தல் இவற்றில் ஏதேனும் ஒன்றிற்காக மேற்கொள்ளும் பயணமே சுற்றுலாவாகச் சொல்லப்படுகிறது. இதனால் நாகரீகம் வளர வளர பயணங்களும் வளரத் தொடங்கியது என்பது அறியப் படுகின்றது.

பயணங்களின் வரலாற்றைப் பண்டைக்காலம், இடைக்காலம், தற்காலம் என மூன்றாகப் பகுக்கலாம். சுற்றுலாவை எடுத்துக் கொண்டால் பண்டைக்காலம் என்பது கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டமாகும். கி.பி. 12 முதல் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரையிலான காலம், இடைக்காலம் ஆகும். அதன் பின் தற்காலம் தொடங்குகிறது. இக்காலப் பகுப்பு வரலாற்றுப் பாடத்தின் காலப் பகுப்பினின்றும் வேறுபட்டது; மாறுபட்டது என்பது இங்கே நினைவு கூர்தற்குரியது. 'சுற்றுலா காலங்கள் தோறும் எவ்வாறு வளர்ச்சி பெற்றது ?' என்பதைக் காண்பது சுவைமிக்கது.

## அ. பண்டைக்காலம்

கற்கால மனிதர்கள் உணவு தேடும் பொருட்டுப் பயணம் செய்தனர். பின்னர் பொருளீட்டப் பயணம் மேற்கொண்டனர். புண்ணிய பூமிகளுக்குப் புனிதப் பயணம் புரிந்தனர். கல்வியின் நிமித்தமும் பழஞ்சுவடிகளைத் தேடியும் ஓர் இடம் விட்டு மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்ந்தனர். நாடோடிக் கூட்டங்களின் நெடும் பயணத்தாலும் படையெடுச்சியாலும் உலகின் பல பகுதிகளில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆரியர் வருகையால் இந்திய வரலாற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதனையும், மிலேச்சர்களின் படையெடுப்பால் உரோமானியப் பேரரசு வீழ்ந்ததையும் - இங்கே நாம் எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

கிரேக்கர்களின் பயண மோகத்தை ஓமரின் 'ஒடிசி' சித்திரிக்கின்றது. உரோமானியர்களும் ஆர்வத்துடன் இன்ப உலாக்கள் சென்றனர். வியத்தகு எகிப்திய பிரமிடுகள், மத்திய தரைக் கடற்பகுதிக் கோயில்கள், வீரத்தை வெளிக்காட்டும் ஒலிம்பிக் விளையாட்டுகள் முதலானவை உரோமானியரின் கருத்தைக் கவர்ந்தன.

புதிதாகக் கண்டறியப்பட்ட வணிக வழிகள் வணிகர்களின் பயணத்தை எளிதாக்கிறது. தக்க பாதுகாப்புடன் இவர்கள் அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டனர். வணிகத் தொடர்புகள் பண்பாட்டுத் தொடர்புகளாக மலர்ந்தன. சுமேரியர்களது (பாபிலோனியர்) நாணயக் கண்டுபிடிப்பும், கி.மு. நான்காயிரத்திற்குப் பின்னர் தோன்றிய வணிக முன்னேற்றமும் பயண வரலாற்றில் புதியதோர் காலக் கட்டத்தைத் தோற்றுவித்தது. பண்டைய பாபிலோனிய மன்னரான 'ஷுல்கி' (Shulgi) சாலைகளைச் செப்பனிட்டுப் பயணியர் நலன் கருதிப் பல ஆய்வில்லங்களைக் கட்டினார்.

இம்மன்னன் கட்டிய தங்குமனைகளே இன்றைய தங்குமிட வசதிகளின் முன்னோடியாகும்.

**பொனீஷியா :** வணிக நிமித்தமாகப் பல நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளமையால் பொனீஷியர்களே இன்றைய பயணத்தின் முன்னோடிகள் எனலாம். வணிகர்கள் என்ற வகையில் இவர்கள் மத்திய தரைக்கடற் பகுதி முழுவதிலும் பயணம் செய்தனர். பல பண்டங்களைக் கிழக்காசிய நாடுகளிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.



கிறித்து பிறப்பதற்கு முன்னமேயே, அயல்நாட்டு வணிகர் பலர் இந்தியாவில் பயணம் செய்தமை இலக்கிய கல்வெட்டு, நாணயச் சான்றுகளால் அறியப்படுகின்றன. இந்தியாவும், சீனாவும் பண்டைக்கால முதலே செல்வ வளத்தில் மேம்பட்டிருந்ததால், உலகின் பல பகுதிகளிலிருந்தும் வணிகர்கள் இவற்றுடன் வாணிகம் செய்யத் தலைப்பட்டனர்.

வணிகம் மற்றும் பொருளீட்டல் வணிகர்களைப் பல நாடுகளுக்குப் பயணம் செய்யத் தூண்டியது. துணிகரச் செயல் புரியும் வேட்கையும் மனிதர்கள் பயணம் மேற்கொள்ள மற்றொரு காரணமாக அமைந்தது. இறைவனின் அருளைப் பெறும் நோக்கத்துடனும் பக்த கோடிகள் பலர் புனிதத் தலங்களை நோக்கித் திருப்பயணங்களை மேற்கொண்டனர். சிலர் மருத்துவத்தன்மை கொண்ட நீர் நிலைகளில் நீராடவும் பயணம் மேற்கொண்டனர். புதிய நிலப் பகுதிகளைக் காண வேண்டும் எனும் ஆர்வமும் சிலரைக் கடல் கடந்த பயணங்களில் ஈடுபடத் தூண்டியது. இப்பயணங்கள் எல்லோராலும் எல்லாக் காலங்களிலும் மேற்கொள்ளப் படவில்லை. காரணம் பாய்மரக் கப்பல்களில் பயணம் செய்த அவர்கள் பருவக்காற்று வீசும் காலங்களில் மட்டுமே பயணம் செய்ய முடிந்தது.

### அயல்நாட்டினரின் பயணக் குறிப்புகள்

பண்டைக்காலத்தில் கிரேக்கர், உரோமானியர், சீனர், பொனீஷியர் ஆகியோர் தமிழகத்துடன் வாணிகம் புரிந்தமை பல சான்றுகளால் உறுதிப்படுகின்றன. இச்சான்றுகளுள் அயல்நாட்டுப் பயணியரின் குறிப்புகளே நமக்குப் பெரிதும் பயன்படுகின்றன. மெகஸ்தனிஸ் எனும் கிரேக்க தூதர், தாலமி எனும் கிரேக்க நிலவியலார், ஸ்டிராபோ எனும் நிலநூலார், பிளினி எனும் உரோம் நாட்டு வரலாற்றறிஞர், யுவான்சுவாங், பாஹியான், ஈத்சிங் போன்ற சீனப் பயணியர் ஆகியோரின் குறிப்புகள் பண்டைய மக்களிடையே நிலவிய பயண ஆர்வத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பெரிப்ளுஸ் என்னும் நூல் தமிழகத்திற்கு வந்திறங்கிய மேலை நாட்டுப் பொருட்களையும் இங்கிருந்த மேலை நாடுகளுக்குச் சென்ற பொருட்களையும் விரிவாகப் பேசுகிறது. இடைக்காலத்தில் ஒரு மார்க்கோ போலோவும் ஒரு இபின் பதூதாவும் தாம் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டதனை இலக்கியங்களாக வடித்துச் சென்றனர். தமிழகத்தைச் சேர்ந்த போகர் எனும் சித்தர் தாம் சீனாவில் கண்ட காட்சிகளை 'போகர் 7000' எனும் நூலில் விரித்துக்கூறுகிறார்.

**கிரேக்கர்கள் :** பண்டைய கிரேக்கர்கள் பயணங்களின் மீது கொண்டிருந்த தனியார்வத்தை ஓமரின் ஒடிசி (Homer's odyssey) சுட்டிக் காட்டுகின்றது. கிரேக்கக் காவியக் கதாநாயகனான உலிசசின் துணிகரமான பயண அனுபவங்கள் கிரேக்கர்களின் நெஞ்சில் பயண ஆர்வத்தைத் தூண்டின எனலாம். வரலாற்றுத் தந்தை எனப் புகழப் பெறுகின்ற ஹெரடாட்டஸ், சிறிய ஆசியா (Asia minor) எகிப்து ஆகிய பகுதிகளில் வரலாற்றுச் சான்றுகளைச் சேகரிக்க ஏறத்தாழ 2000 கி.மீ. தொலைவு பயணம் மேற்கொண்டுள்ளார். தாலமி, பிளாட்டோ, அரிஸ்டாடில், பித்தகோரஸ் - முதலான கிரேக்க அறிஞர்களும் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டனர். சமயத்தில் நாட்டம் கொண்டு கிரேக்கர் தமது தெய்வங்களை வணங்கவும் வீர விளையாட்டுக்களில் பங்கு கொள்ளவும் பயணங்களை மேற்கொண்டனர்.

யூடோக்சஸ் (Eudoxus of cyzicus) என்பவரே கி.மு. 2 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முதன் முதலாக அலெக்சாண்ட்ரியாவிலிருந்து இந்தியாவிற்குப் பயணம் செய்தவர் ஆவார்.

கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்துள்ள ஐம்பதிற்கும் மேற்பட்ட கி.மு. 350 க்கும் கி.மு. 100 க்கும் இடைப்பட்ட காலத்தினதான கிரேக்க நாணயங்கள், தமிழக - கிரேக்க வணிக, கலாச்சார உறவுகளை விளக்குகின்றன. மேலும் யூடோக்சோசின் கடற்பயணம் (Voyage of Eudoxus of Knidos) தமிழக கிரேக்க வர்த்தகம் வளர்ந்ததையும் இவ்வணிகம் உரோமானியரது தமிழக வாணிகத்திற்கு முற்பட்டது என்பதையும் அறிவிக்கின்றது.

படையெடுப்பாளர் என்ற முறையில் வரலாற்றில் பயணம் மேற்கொண்ட பெருமை அலெக்சாந்தரையே சாரும். கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரது படையெழுச்சிப் பயணத்தின் போது, வடஇந்தியாவில் நன்கு பராமரிக்கப் பட்ட சாலைகளும், சாலையின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களும் இருந்தனவென்று அறிகிறோம். ராஜபாட்டை ஒன்று (Royal Highway), 19 மீட்டர் அகலமும் 1920 கி.மீ தொலைவும் இருந்ததாகவும், அதில் மக்கள் தேர்களிலும் பல்லக்குகளிலும் மாட்டுவண்டிகளிலும் குதிரை, யானை, ஒட்டகம் ஆகியவற்றிலும் பயணம் மேற்கொண்டதாகவும் அந்த மாவீரருடன் சென்ற வரலாற்றாளர்கள் குறிப்பிடுவர். இதனால் பண்டைய இந்தியாவில் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதனை அறியலாம்.

பண்டைக் காலத்தில் ஒட்டகம் செல்லும் சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இதனைப் பட்டு வாணிகத்தி...



டிப்பட்டு என்றுமிட்டத்திறதும் சாலைகள் போடப்பட்டிருந்ததை அறியலாம். செனோபன் (Xenophon) என்பார் பாரசீகத்திலிருந்து பத்தாயிரம் வீரர்களுடன் சிரியா, ஆசியா வழியாக கிரேக்க நாட்டிற்குத் திரும்பிய பயண அனுபவங்களை அனாபசிஸ் எனும் நூலில் சுவைபடக் கூறியுள்ளார்.

## பண்டைக்கால இந்தியாவில் பயணம்

பழம்பெருமை கொண்ட இந்தியா பண்டைக்காலத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளை மகிழ்விடும் நாடாக விளங்கியது. பழங்காலத்தில் இந்தியாவிலுள்ள புத்த சமய தொடர்பான புனிதத் தலங்களைப் பார்வையிடவும், வணிகத் தொடர்பாகவும், வரலாற்றுச் சின்னங்களை பார்வையிடவும் அயல்நாட்டினர் பலர் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். இந்தியாவின் செல்வச் செழிப்பைக் கேள்விப்பட்ட படையெடுப்பாளர்கள் சிலர், இந்தியாவின் மீதுப் படையெடுத்தனர். இவர்களுள் கிரேக்க மாவீரன் அலெக்சாந்தர் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

இந்தியாவில், சிந்து சமவெளி நாகரீகத்தின் தொடர்பான வரலாற்றுக்கு முந்தைய காலத்திய மக்கள் வாழ்ந்த தடயங்கள் காணப்படும் பல இடங்கள் (Sites) உள்ளன. இவற்றை ஆய்வு செய்யவும் அயல்நாட்டினர் பலர் இந்தியாவிற்கு வந்துள்ளனர். கி.மு. 3000 அளவில் இந்திய... மெசபடோமியாவுடனும் எகிப்து நாட்டுடனும் கப்பல் போக்குவரத்தை... மேற்கொண்டிருந்ததாக அறிஞர் சார்லஸ் வொலின்டன் கூறுவர். கட... ஆய்வாளர் ஆலன் வில்லியம்ஸ் என்பார். "இந்தியப் பெருங்கடல்தா... உலகப் படகுப் போக்குவரத்தின் பிறப்பிடம்" எனக் கூறியுள்ள... இந்தியரின் கடற்பயணப் பழமையை உணர்த்தும். இந்தியா, சீனம், கிரேக்க... உரோம் முதலான நாடுகளுடன் பண்டைக் காலத்தில் வாணிக... புரிந்ததற்கான சான்றுகளைத் தன்னகத்தே கொண்ட பல இடங்க... தமிழகத்தில் உள்ளன. வாஸ்கோடகாமா இந்தியா வருமுன்பே சங்கர... சீடர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

பண்டைய இந்தியாவின் மாமன்னனாகத் திகழ்ந்த அசோ... பிறந்ததால் உலகப் புகழை இந்தியா பெற்றது. இம்மாமன்னர் புத்த ச... வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். பயணிகளின் நலம் கருதி ... விகாரைகளையும் குகைக்கோயில்களையும் சங்கங்களையும் நிறுவி... பழங்காலத்தில் கால்நடையாகவும், ஒற்றை மாட்டு வ... கட்டைவண்டிகள் மூலமாகவும் இந்தியர் பயணம் செய்தனர். இந்தியா... சமயப் பயணிகள் சிலர் அயல்நாட்டிலிருந்து வந்தனர். இவர்களு... குறிப்பிடத் தக்கவர் ஆவர். இவ...

முதலாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு கிறித்துவ சமயத்தைப் பரப்ப வந்தார். அடுத்து கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சீனப் பயணியான யுவான் சுவாங் வருகை புரிந்தார். புத்தர் காலத்திலேயே தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் இலங்கைக்கு, இந்திய வணிகர்களும் சமயப் பரப்புநர்களும் கப்பலில் சென்றுள்ளனர்.

பண்டைக் காலத்திலிருந்தே நம் பாரதம் பிறநாடுகளுடன் வணிக, பண்பாட்டு உறவினைப் பெற்றிருந்தது. வணிக நிமித்தமாகப் பல அயல்நாட்டு வணிகர்கள் நம்நாட்டிற்கு வந்து வாணிகம் புரிந்தனர். நம்நாட்டு வணிகர்களும் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று வாணிகம் புரிந்தனர். வணிக நிமித்தமாக மட்டுமின்றி, பண்பாட்டு உறவுவிற்காகவும் இந்தியா உலகின் பல நாடுகளுடன்தொடர்பு கொண்டிருந்தது. இந்தியாவின் ஆன்மிகச் சிறப்பை உணர்ந்த அயல்நாட்டுப் பயணியர் பலர், நம் பாரதத்திற்கு வருகை புரிந்தனர். அவர்களுள் சீனப் பயணியர் மிகவும் குறிப்பிடத் தக்கவராவர்.

**சீனப் பயணியர் :** பாகியான், யுவான்சுவாங், இத்சிங், கிட்சிஸ் முதலான சீனப் பயணியர் இவர்களுள் முக்கியமானவராவர்.

**பாகியான் :** இவர் ஒரு சீனப் பயணி. பௌத்த சமயத் துறவி இந்தியாவைப் பற்றிய குறிப்புகள் எழுதிய சீனப் பயணியருள் இவரே முதன்மையானவர். கி.பி. 399 இல் சில துறவியருடன் இந்தியாவிற்கு வந்து, பயணம் செய்து, கி.பி. 414 முடிய 15 ஆண்டுகள் இங்கு தங்கியிருந்தார். இவரது குறிப்புகள் அடங்கிய நூல் **போ கோ சி** (FO KUO CHI) என அழைக்கப் பெறுகிறது. இவர் ஏறத்தாழ முப்பது நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ளார். தரை வழியாக இந்தியாவிற்கு வந்த இவர் கடல் வழியாகத் திரும்பினார்.

இரண்டாம் சந்திரகுப்தரது ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த பாகியான், குப்தர் காலத்திய சமூக வாழ்க்கை பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் புருஷபுரம், தட்சசீலம், மதுரா, பாடலிபுத்திரம், கயா ஆகிய பகுதிகளின் வழியாக இவர் பயணம் மேற்கொண்டார். புத்தரது வாழ்க்கைத் தொடர்பான லும்பினி, வைசாலி, நாளந்தா, ராஜகிருகம், புத்தகயா ஆகிய புனிதத் தலங்களையும் இவர் பார்வையிட்டார். பாடலிபுத்திரத்தில் மூன்றாண்டுகள் தங்கிய பாகியான், அசோகரின் அரண்மனையைக் கண்டு வியந்தார். பின்னர் சிந்துவிலிருந்து வடமதுரைக்கு யமுனை ஆற்றின் வழியாகப் பயணமானார்.



இந்தியப் பயணத்தின் இறுதியில் தாம்ரலிப்தி துறைமுகத்தில் கப்பலேறி இலங்கை, ஜாவா வழியாகத் தாயகம் திரும்பினார்.

**யுவான்சுவாங் :** இவர் கி.பி. 630 முதல் 644 முடிய இந்தியாவின் பல பகுதிகளைப் பார்வையிட்டார். 'பயணிகளின் இளவரசர்' எனும் பெருமையைப் பெறும் இவர் சீனாவிலிருந்து புறப்பட்டுத் தாஷ்கண்ட, சாமர்க்கண்ட ஆகியவற்றைக் கடந்து காந்தாரம் சென்றார். பின்னர் கபிலவஸ்து, காசி, குசிநகரம், கயா முதலான புனிதத் தலங்களை வழிபட்டு, ஆசியாவின் புகழ்மிகு பல்கலைக்கழகமான நாளந்தாவில் தங்கிப் படித்துப் பின்னர் தமிழகத்தின் காஞ்சி மாநகர் வரையில் பயணம் செய்தார். இவர் எழுதிய நூல் **'சியூகி'** ஆகும். இதில் இவரது பயணம் பற்றிய பல சுவையான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சிட்கிஸ் எனும் சீனப்பயணி கி.பி. 672 - 688 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பயணம் செய்து தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எழுதி வைத்துள்ளார்.

**உரோமானியரும் பண்டைக்காலப் பயணங்களும்**

உலகப்பயண வரலாற்றில் உரோமானியர்களுக்குத் தனித்ததோர் இடமுண்டு. மகிழ்ச்சிக்காகவே பயணம் மேற்கொண்டோருள் உரோமானியர் முதன்மை வகிக்கின்றனர். உரோமாபுரியைக் கோநகராகக் கொண்ட உரோமானியப் பேரரசில், செய்தித் தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சிப் பெற்றிருந்தன. அதே சமயத்தில் பயணிகளுக்குப் பாதுகாப்பும் இருந்தன. எனவே மக்கள் பயமின்றி இன்பப் பயணம் மேற்கொண்டனர். அடுத்து, நாட்டில் அமைதி நிலவியது. நல்ல தரமான சாலைகளும் பாலங்களும் அமைக்கப்பட்டிருந்தன. எனவே சுற்றுலாப் பயணம் வளர்ச்சி பெற்றது. இவர்கள் தமது பயணக் குறிப்புகளைப் பாப்பிரஸ் எனும் வாழைத்தண்டுத் தாள்களில் (Popyrus scrolls) எழுதிப் பாதுகாத்தனர். இக்குறிப்புகளைக் கொண்டு உரோம் நாட்டின் வணிக வழிகளின் பெயர்களையும், ஓர் இடத்திற்கும் மற்றோர் இடத்திற்கும் இடையில் உள்ள தூரத்தையும் அவற்றைக் கடந்து செல்ல ஆகும் நேரத்தையும் அறியமுடிகின்றது.

இவர்கள் வீரமிக்க குதிரை வீரர்கள், ஒரே நாளில் நூற்றுக் கணக்கான கி.மீ. தூரத்தைக் குதிரை மூலம் கடந்தனர். எகிப்தில் உள்ள பிரமாண்டமான பிரமிடுகளையும் கிரேக்க நாட்டு ஒலிம்பிக் போட்டிகளையும், மத்திய தரைக் கடற்பகுதிகளில் இருந்த திருக்கோயில்களையும் கண்டுகளிக்க இவர்கள் பயணம் மேற்கொண்டனர்.

**மருந்து நீர் ஊற்று :** உரோமானியர்கள் இன்பச் சுற்றுலாவிற்கு முக்கியம் அளித்தனர். எனவே மூலிகைகள் கலந்த நீரில் குளிப்பதற்காகவும் தூயநீரை அருந்துவதற்காகவும் அருவிகளைத் தேடிச் சென்றனர். நோயைக் குணப்படுத்தும் நீர்நிலைகளுக்கும் சென்று வந்தனர். 'ஸ்பாஸ்' என்றழைக்கப்படும் கடற்கரை ஓர இடங்களில் இன்பப் பொழுது போக்கினர். பின்னர் ஆங்கே மருத்துவமனைகளையும் நிறுவி, நோயைக் குணப்படுத்தினர். இப்பகுதி சுற்றுலா மையமாகவும் பயன்பட்டது. மருந்து நீருற்றுக் கேந்திரங்களை இவர்கள் ஏற்படுத்தினர்.

**ஜூலியஸ் சீசரின் படையெழுச்சி :** உலகப் புகழ் பெற்ற மாபெரும் வீரர்களுள் ஒருவராகத் திகழ்ந்த ஜூலியஸ் சீசர் மாபெரும் படையெடுப்பாளர். இவர் தமது படையெடுப்பின் நிகழ்ச்சிகளை ஆவணங்களில் குறித்து வைத்துள்ளார். இவரது படையெடுப்பின் போழ்து சந்தித்த மன்னர், மக்கள், வீரர், இடங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றிய செய்திகளையும் குறித்து வைத்தார். படையெடுப்பின் போது பெற்ற வெற்றிகளை, இவர் அவ்வப்போது உரோமாபுரியில் மக்கள் கூடுமிடங்களில் அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்க ஆணையிட்டார்.

உரோமானியப் பேரரசு முழுவதையும் பின்னிப் பிணைத்த நெடுஞ்சாலைகள் அவர்களது பயணத்தை எளிதாக்கின. இவர்கள் நிறுவிய கடலோரப் பொழுது போக்கிடங்களில் தங்கியிருப்போரின் பொழுது போக்கிற்காக விளையாட்டுப் போட்டிகள், நாடகங்கள், விழாக்கள், வேடிக்கைகள், கேளிக்கைகள் நடத்தப் பெற்றன.

கி.பி. முதலாம் நூற்றாண்டிற்குப் பின்னர் உரோம் நாட்டில் சுற்றுப் பயணங்கள் ஆடம்பரச் செயலாக மாறின . மக்கள் கோச்சு வண்டிகளில் பயணம் செய்தனர். சரக்குக் கப்பல்களில் பயணியர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டனர். உரோமானியர் அயல் நாடுகளுடன் போர் தொடுத்த போது, வீரர்கள் பலர் கப்பல்களில் பயணம் செய்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன.

**உரோமானியரும் தென்னிந்தியாவும் :** பண்டைக் காலத்தில் உரோம் நாட்டு வணிகர்கள் அரசு ஆதரவுடன் தென்னிந்தியாவுடன் வாணிகம் புரிந்து வந்தனர் என்பதனை நாணயச் சான்றுகளாலும் அகழாய்வுச் சான்றுகளாலும் அறிகிறோம். தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய தென்னிந்திய அரசுகளுடன் உரோம் நாட்டினர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதனை ஆங்குக் கிடைத்துள்ள உரோமானியக் காசுகளால் அறியலாம்.



உரோமானியர் தமிழகத்துடன் வணிக உறவு கொண்டிருந்தனர் என்பதனை நாணயச் சான்றுகளாலும், அகழாய்வுச் சான்றுகளாலும் சங்க இலக்கியச் சான்றுகளாலும் அறியலாம். கி.மு. 31 முதல் கி.பி. 218 முடிய இவ்வணிகம் சிறந்திருந்தது என்பதனைத் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள உரோமானிய பொன், வெள்ளி, செப்பு நாணயங்களாலும் அகழாய்வில் கிடைத்துள்ள அரிட்டைன், ஆம்போரா, ரௌலட்டட் போன்ற உரோமானியப் பானை ஓடுகளாலும் அறியலாம்.

பாண்டிச்சேரி அருகிலுள்ள அரிக்கமேடு அகழாய்வில் உரோமானியக் குடியிருப்பு இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அழகன்குளம் அகழாய்வினாலும் உரோமானிய - தமிழக வணிக உறவு புலனாகிறது. அகஸ்டஸின் ஆட்சிக் காலத்தில் (கி.மு. 27 - கி.பி. 14) தமிழகத்துடனான வாணிகம் உச்ச நிலையில் இருந்தது.

கி.பி. 217 இல் கரகல்லா (Caracalla) கி.பி. 193 - 217) இறந்த பின்பு தமிழக - உரோம வாணிபமும் வீழ்ந்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இவ்வாணிபம் மீண்டும் மலர்ந்தது என்பதனை கரூர், மதுரை, சிரிலங்கா ஆகியவற்றில் அதிக அளவில் கிடைத்துள்ள உரோமானிய் செப்பு நாணயங்களால் அறியலாம். களப்பிரர்காலத்தில் (கி.பி. 300 - 600) தமிழகத்தில் உரோமானியரது வாணிபம் சிறந்திருந்தமை விந்தைச் செய்தியாகும். எனவே களப்பிரர் உரோம வாணிகத்தை ஆதரித்தனர் போலும்.

மாபெரும் உரோமானியப் பேரரசும் கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக ஐரோப்பாவில் பயணங்களின் வளர்ச்சியும் தடைப்பட்டது. இன்பச் சுற்றுலா செல்வதும் குறைந்தது. உலக வணிகமும் பெருகவில்லை. இவ்வாறு பண்டைக் காலத்தில் வாணிகம், சமயம், வீரதீர விளையாட்டு மருத்துவம், புதிய நாடுகளைக் கண்டறியும் ஆர்வம் முதலான நோக்கங்களுக்காகப் பயணங்கள் வளர்ந்தன.

**ஐரோப்பிய நாட்டுப் பயணியர் :** வாஸ்கோடாகாமாவால் இந்தியாவிற்குப் புதுவழி கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, ஐரோப்பிய நாட்டின் பல பகுதியைச் சேர்ந்தோர் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டனர். இவர்களுள் நிக்கோலோ கொண்டி குறிப்பிடத் தக்கவர் ஆவர். இத்தாலிய நாட்டைச் சேர்ந்த இவர், விசய நகர அரசைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். போர்த்துக்கீசிய வணிகர்களான பியஸ், நூனிஸ் ஆகிய இருவரின் குறிப்புகள் பல சுவையான செய்திகளைக்

கொண்டுள்ளன. அப்துல் ரசாக்கின் குறிப்புகளும் விசய நகர மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் இருந்து கிறித்துவ சமயத்தை இந்தியாவில் பரப்ப வந்த பாதிரிமார் பலர் இந்திய அரசியல், சமூக நிலை பற்றிப் பல குறிப்புகள் எழுதியுள்ளனர். இவை கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் தமிழக அரசியலை விவரிக்கின்றன. ராபர்ட் டி நொபிலி, சீகன் பால்க் முதலான சமயப் பரப்புநரின் கடிதங்கள் தமிழரின் சமூக வாழ்க்கையை விரித்துக் கூறுகின்றன. வீரமாமுனிவரின் இலக்கியப் படைப்புகள் தமிழ் மக்களின் வாழ்க்கைச் சித்திரங்களே ஆகும்.

## ஆ. இடைக்காலம்

உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்திலிருந்து (கி.பி. 5 ஆம் நூற்றாண்டு), மறுமலர்ச்சிக் காலம் வரையிலான காலம் ஐரோப்பாவில் இடைக்காலம் என்றே கருதப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இக்காலக் கட்டத்தில் திருச்சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டே செயல்பட்டன. எனவே இக்காலத்தில் புதிய கடல் வழிகள் புதிய போக்குவரத்து வசதி, புதிய சிந்தனை, தோன்றவில்லை. இதன் விளைவாகச் சுற்றுலாவும் வளர வழியில்லை.

இடைக்காலம் பக்திக் காலம்; ஆன்மிக ஆர்வம் மிகுந்த காலம். எனவே சமய புனிதப் பயணங்கள் மட்டுமே அன்று மேற்கொள்ளப்பட்டன. அடுத்து புதிய நாடுகள் கண்டறியப்பட்டதாலும், கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் மறுமலர்ச்சியின் தோற்றத்தாலும் கிறித்துவ சமய போதகர்களின் முயற்சியாலும் இடைக்காலத்தில் பயணங்கள் வளர்ச்சி பெற்றன.

அடுத்து இக்காலக் கட்டத்தில் நிலமானியப் பிரபுக்கள் தமது வீரர்களுடன் மதத் தொடர்பான இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டனர். பிரபுக்களின் பிள்ளைகள் அயல்நாட்டு அரச சபைகளில் கல்வி கற்பதன் நிமித்தமும், நண்பர்கள் சுற்றுலா நிமித்தமும் மாணவர்கள் கல்வி கற்றல் பொருட்டும் சென்றனர்.

### இடைக்காலப் பயணிகள் (Medieval Travellers)

இடைக்காலப் பயணியருள் பெஞ்சமின் டுடேலா, இபின் படூட்டா, பிமெண்டோ, போகர், மார்க்கோ போலோ, மாண்டிகாரினோ ஜான், நிக்கோலா டி கொண்டி, பீயஸ், நூனிஸ், சர்தாமஸ் ரோ, ஹாக்கின்ஸ், நிகிடின், பெர்னியர், டாவர்னியர், பிரான்சிஸ்கோ, பிரான்சிஸ், சேவியர், டி நொபிலி, பெல்சார்ட் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர். இவர்களது





பயணங்கள் பற்றியும் பயணக் குறிப்புகள் பற்றியும் தனித்தனியாகக் காண்போம்.

**பெஞ்சமின் டுடேலா (BENJAMIN OF TUDELA) :** கீழைநாடுகளைப் பார்வையிட்ட இடைக்காலப் பயணியருள் பெஞ்சமின் டுடேலாவே முன்னவர் ஆவார். யூத அறிஞரான இவர், கி.பி. 1160 இல் சரகோசா என்னுமிடத்திலிருந்து புறப்பட்டு, ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகள் காலம் ஐரோப்பா, பாரசீகம், இந்தியா முதலான நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். ஆங்கு குடியிருந்த யூதர்களைப் பற்றிய விவரங்களை எழுதியுள்ளார். மேலும் தான் சென்ற இடங்களின் பூகோள அமைப்புகளைப் பற்றியும் தமது குறிப்பில் விவரிக்கிறார்.

**இப்னு படூடா (IBN BATUTAH) :** இவர் இஸ்லாமிய மூர் இனத்தைச் சார்ந்தவர். மொராக்கோ நாட்டவர். கி.பி. 1304 ஆம் ஆண்டு டாஞ்சியர் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தனது 22 ஆம் வயதில் சொந்த ஊரை விட்டுப் புறப்பட்டு ஏறத்தாழ முப்பதாண்டுகள் காலம் தொடர்ந்து பயணம் செய்தார். ஆப்பிரிக்கா மேற்கு ஆசியா வழியாக கி.பி. 1333 இல் இவர் இந்தியாவிலுள்ள சிந்துப் பகுதிக்குச் சென்றார். அடுத்து இந்தோனேசியா, சீனா, மாலத்தீவு, சிரிலங்கா, முதலான நாடுகளுக்கும் பயணம் செய்தார். இவர் மொத்தம் 17,000 மைல்கள் பயணம் மேற்கொண்டார். மெக்காவிற்குப் புனிதப் பயணம் செய்தார். 'ரெஹலால்' எனும் நூலில் இவரது பயண அனுபவங்கள் கூறப்பட்டுள்ளன.

இந்தியாவில் நீண்ட காலம் தங்கியிருந்த இவர் இந்திய நாட்டின் இயற்கை வளங்கள் தொழில்கள், மக்கள் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி எழுதியுள்ளார். முகமது பின் துக்ளக் டெல்லியில் சுல்தானாக ஆண்ட போது இவர் அரச விருந்தினராக இருந்தார். கி.பி. 1342 இல் முகமது பின் துக்ளக் சீனாவிற்கு அனுப்பிய தூதுக் குழுவில் இவரும் இடம் பெற்றார்.

**மார்க்கோபோலோ (MARCOPOLO) :** இடைக்காலப் பயணியருள் மிக்க புகழ் பெற்றவர். மார்க்கோ போலோ ஆவார். கி.பி 1254 இல் இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரில் பிறந்த இவர் தனது தந்தையாரைப் போல (நிக்காலோ போலோ) பயணம் செய்வதில் பேரார்வம் மிக்கவர். கி.பி. 1271 இல் தந்தையும் மகனும் இணைந்து பாரசீகம், ஆப்கானிஸ்தானம் என்னும் நாடுகளுக்குப் பயணம் செய்தனர். இவர்களது பயணம் பாமீர் பீடபூமி வழியாகத் தொடங்கியது. அடுத்து சீனாவிற்குச் சென்று ஆங்கு இருபது ஆண்டுகள் தங்கி சுற்றுப்பயணம் செய்தார். பின்னர் தனது நாடு திரும்பினார். வரும்

வழியில் இவர் இந்தியா, ஜாவா, சுமத்ரா முதலான நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

தென்னிந்தியாவிலுள்ள மலபாருக்குப் பயணம் செய்த இவர், பாண்டிய நாட்டைப் பற்றியும் பாண்டியரின் ஆட்சி முறை பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். தென்னிந்தியப் பறவைகள், விலங்குகள், ஆகியவை பற்றியும் விளைபொருள்களைப் பற்றியும் குறித்துள்ளார். கொல்லம், காயல், குமரி ஆகியவை பற்றியும் இவர் பல அரிய செய்திகளைச் சேகரித்துக் கூறுகிறார். இலங்கையில் கிடைக்கும் வைரம், மாணிக்கம், மரகதம் முதலான விலையுயர்ந்த கற்களைப் பற்றியும் விவரிக்கிறார்.

இவரது "பயணக் குறிப்புகள்" என்னும் நூல் பிற்காலப் பயணிகளுக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது. ஐரோப்பிய நாடுகளுக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்கும் நேரடித் தொடர்பை முதன் முதலில் ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும். இவரது பயணங்கள் வணிக நோக்கம் கொண்டவை.

**வேறு சில பயணியர் :** கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இந்தியாவிற்கு வருகைதந்த ஐரோப்பியப் பயணியருள் பிரான்சிஸ்கோ ப்ரயர் ஜான்மாண்டே கொரினோ- (FRANCISCO FRIAR John of Monte Corrino) ஒருவராவர். கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளிலும் பல ஐரோப்பிய சந்நியாசிகளும், பயணிகளும் வீரதீரப்பயணிகளும் (Adventurers) அறிவைத்தேடி இந்தியாவையும் மற்ற பகுதிகளையும் பார்வையிட்டனர்.

## இந்தியப் பயணியர்

**போகர் (போகநாதன் கி.பி. 1550 - 1625)**

தமிழ்நாட்டின் பழனிமலை அடிவாரத்தில் உள்ள வைகாவூரில் பிறந்த இவர் 18 சித்தர்களுள் ஒருவர். காலங்கிநாதரின் மாணவர். இவர் யோகம், மருத்துவம், பயணம், தர்க்கம், சாத்திரம், வேதம், காவியம் ஆகியவை பற்றி இருபதிற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தவர். ரிலங்கா, கடாரம், (மலேசியாவின் ஒரு பகுதி) உரோம், அட்டத் தீவுகள், ருசலேம், மெக்கா, பாரிஸ், கிரீன்லாந்து, சீனா, ஆப்பிரிக்க நாடுகள், வடக்கு சபீரியா, யுரேசியா, மங்கோலியா, சுமத்ரா, சிக்கிம், நேபாளம் முதலான டுகளுக்குப் பயணம் செய்துள்ளார்.



சீனம், தமிழ், சமஸ்கிருதம், மற்றும் தென்னிந்திய மொழிகளில், இவர் பாண்டித்யம் பெற்றிருந்தார். இவரது சீன அனுபவங்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை.

**தயாநந்தர்** "இராமாநந்தரும், சைத்தன்யரும் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த தயானந்தரும் ஊர் சுற்றும் தர்மத்தைப் பின்பற்றியவர்களே" என்று இராகுல் சாங்கிர்த்தியாயன் கூறுகிறார். ஊர் சுற்றி என இவர் குறிப்பிடுவது சுற்றுலாப் பயணிகளைத்தான்.

## இ. தொழிற் புரட்சியும் சுற்றுலா வளர்ச்சியும் (Industrial Revolution and Tourism Development)

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வெடித்த தொழிற்புரட்சி தொழில்துறையில் மட்டுமின்றி மனிதவாழ்வின் பல்வேறு அம்சங்களிலும் மாபெரும் மாற்றத்தை உருவாக்கியது. இங்கிலாந்தில் முதற்கண் தொடங்கி பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் பரவிய இப்புரட்சி, தொழில் நுட்பத்துறையில் மாபெரும் சாதனைகளைப் படைத்தது. இதன் விளைவாக சுற்றுலாத்துறையிலும் புரட்சி தோன்றியது. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட அதிரடி முன்னேற்றம், சுற்றுலா வளர்ச்சிக்கு வித்திட்டது. பணம் படைத்தவர்களும் ஓய்வு கிடைத்தவர்களும் இன்பச் சுற்றுலா செல்வதில் பெருநாட்டம் கொண்டனர்.

தொழிற்புரட்சி, சமூகப் பொருளாதாரத்துறைகளில் மாற்றங்கள் நிகழக் காரணமாக இருந்தது. நீண்ட நேர உழைப்பு, சுகாதார வசதியற்ற தொழிற்சாலை, ஏழ்மையான வாழ்வு - இவை தொழிலாளர்களைச் சிந்திக்கத் தூண்டின. தொழிலாளர் வர்க்கம் என்னுமோர் புதிய சமுதாயப் பிரிவு உண்டானது. நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாக மாறியது . விலைவாசியும் ஏறியது; மக்கள் தொகையும் பெருகியது. மாசுபடிந்த தொழிற்சாலைகளில் மணிக்கணக்காக உழைத்து உழைத்து அலுத்துப்போன தொழிலாளர்கள் ஓய்வை விரும்பினர். இந்த நச்சுச் சூழலிலிருந்து விடுதலை பெற்று, இயற்கையெழில் மிக்க இடங்களுக்குச் சென்று வருவது தொழிலாளர் வாழ்வில் இன்றியமையாததாக ஆகிவிட்டது.

**ஊதியத்துடன் கூடிய விடுமுறை (Paid Holiday)**

தொழிற்புரட்சியின் குறிப்பிடத்தக்க விளைவுகளுள் தொழிற்சங்கங்களின் தோற்றமும் ஒன்றாகும். இவை தொழிலாளர்களின் உரிமைகளுக்காவும் நலன்களுக்காகவும் முனைந்து போராடியது. இப்போராட்டங்களின் விளைவாகத் தொழிலாளர்கள் ஊதியத்துடன் கூடிய

விடுமுறைப் பெற்றனர். இதனால் தொழிலாளர்கள் சுற்றுலா செல்லும் வாய்ப்பினைப் பெற்றனர். இதன் விளைவாக சுற்றுலா வளர்ச்சி பெற்றது. அடுத்த போக்குவரத்துத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. போக்குவரத்து சாதனங்களும் தகவல் தொடர்பு சாதனங்களும் பெருகின. இவை சுற்றுலா வளர்ச்சிக்கு வழிகாட்டியாக, ஒளியூட்டியாக அமைந்தன.

**தொழிற்புரட்சிக்குப் பின்னர்**

தொழிற்புரட்சி ஐரோப்பிய சமுதாய மாற்றத்திற்கு வழிவகுத்ததனை முன்பே கண்டோம். மக்கள் தொகைப் பெருக்கம், தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலியது.

**விடுமுறைகள்** : தொழிற்புரட்சிக்குப் பின் ஏற்பட்ட ஆண்டு விடுமுறை தொழிலாளர்களுக்கு வரப்பிரசாதமாக விளங்கியது. அடுத்து ஐரோப்பிய மக்கள் குதூகலத்துடன் கொண்டாடிய கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்ற பல விழா நாட்களும் பொதுமக்களுக்கான விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டன. கி.பி. 1870 முதல் வங்கி விடுமுறை நாளும் வழக்கத்திற்கு வந்தது. அடுத்து வாரம் ஒரு நாள் விடுமுறை எனும் நிகழ்வு பெரிதும் தொழிலாளர்களை மகிழ்வித்தது. இவ்விடுமுறை கிளைவர் முதலாளி - தொழிலாளர் பேச்சுவார்த்தையின் விளைவாகவும் சில நாள் விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டன. இவை 'எழுச்சி நாட்களாக' கருதப்பட்டன.

கோடைகால விடுமுறையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அறிமுகம் ஆனது. உள்ளூர் விழாக்கள், கொண்டாட்டங்கள் மக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டின. பிரிட் போர்டில் ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது வாரங்கள், ஆண்டு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட விடுமுறைகளுடன் சில மேலும் சில நாட்களில் விடுப்பு எடுத்துக் கொண்டனர். ஆண்டு விடுமுறைகள் மக்களின் சுற்றுலா ஆர்வத்தைத் தூண்டின. எனவே தொழிற்புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட ஆண்டு விடுமுறை, சுற்றுலா செல்வதற்கு பெரு முழுமுதற் காரணமாக அமைந்திருந்ததெனலாம்.

**தொழிற்புரட்சியும் போக்குவரத்து வளர்ச்சியும்**

தொழிற்புரட்சியின் மகத்தான விளைவுகளில் போக்குவரத்து வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். நீராவி எந்திரங்களின் கண்டுபிடிப்பு - நீர்வழி நிலவழிப் போக்குவரத்தில் மாபெரும் புரட்சியை தோற்றுவித்தது





பயணிகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விரைவாகச் செல்ல இவை உதவியதால், சுற்றுலா வளர்ச்சியடைந்தது. நீர்வழி, நிலவழிப்போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பற்றி இங்கே காண்போம்.

**இரயில் போக்குவரத்து** : தொழிற் புரட்சியின் விளைவாக இருப்புப்பாதைப் போக்குவரத்து முன்னேற்றம் கண்டது. 1825-ஆம் ஆண்டில் ஜார்ஜ் ஸ்டீவன்சன் எனும் அமெரிக்கர் நீராவி எந்திரத்தைத் தயார் செய்து, அதன் மூலம் இரயில் வண்டி ஒன்றை ஓட்டினார். அடுத்து ஸ்டாக்டன் டார்லிங்டன் 'ஆக்டிவ்' என்ற இரயில் வண்டியை ஓட்டினார். இதிலிருந்தே இரயில் வண்டியின் யுகம் தொடங்கியது எனலாம். இரயில் வண்டி வரலாற்றில் கி.பி. 1830-ஆம் ஆண்டு பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க ஆண்டு எனலாம். அந்த ஆண்டில்தான் லிவர்பூலுக்கும் மான்செஸ்டருக்கும் இடையேயான இரயில்பாதை தொடங்கப்பட்டது. இரயில் பயணத்தின் தொடக்கம் சுற்றுலா வளர்ச்சி வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.

தொடக்க காலத்தில் சரக்குகளை ஏற்றிச் சென்ற ரயில் நாளடைவில் மக்களையும் ஏற்றிச் சென்றது. இங்கிலாந்தில், தொழில் நகரங்கள் இருப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஏறத்தாழ 9500 மைல் தூரம் இருப்புப்பாதைகள் போடப்பட்டன. இரயில் பயணங்கள் செல்வாக்கு பெற்றதால் பல இடங்களைச் சுற்றுலாப் பயணியர் சுற்றிப் பார்க்க முடிந்தது.

**சுற்றுலாக் கழகத்தின் தொடக்கம்**

ஒழுங்குபடுத்தப்பட்ட இரயில் பயணம் கி.பி.1814-இல் தான் தொடங்கப்பட்டது. இவ்வுலகின் முதல் விளம்பரப்படுத்தப்பட்ட சுற்றுலாவை நடத்திய பெருமை இங்கிலாந்தின் டெர்பிசயரைச் சேர்ந்த ஒரு போதகரைச்சாரும். இவர் லாபரோ என்னும் ஊரிலிருந்து, சமயக் கூட்டத்தில் கலந்து கொள்ள 570 பயணியரை லீசெஸ்டர் எனும் ஊருக்கு இரயில் வண்டியில் அழைத்துச் சென்றார். 'மிட்லேண்ட் கண்டீஸ் ரயில்வே' என்ற கம்பெனியின் இரயிலில் பயணி ஒருவருக்கு ஒரு ஷில்லிங் என்ற வீதம் கட்டண சலுகைப் பெற்றுள்ளார். இப்பயணத்திற்கு ஆலோசனை கூறியவர் பிற்காலத்தில் புகழ்பெற்ற தாமஸ் குக் ஆவார். இப்பயணத்தின் வெற்றி தாமஸ் குக்கிற்கு மேலும் பல பயணங்களை ஏற்பாடு செய்யத் தூண்டியது எனபது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

**தாமஸ் குக்கின் பணி :** உலகின் முதலாவது பயண முகவர் எனும் பெருமைக்குரிய தாமஸ் குக், கி.பி. 1843-இல் லீசெஸ்டரிலிருந்து டெர்பி வரை ஏறத்தாழ மூவாயிரம் சுற்றுலாப் பயணியரை இரயிலில் அழைத்துச் சென்றார். பின்னர் இவர் ஒவ்வொரு ஆண்டும் ஐயாயிரம் சுற்றுலாப் பயணிரை சுற்றுலாவில் ஈடுபடுத்தினார். இவர் 1865 ஆம் ஆண்டளவில் தனது சுற்றுலா கழகத்தைப் பிறநாடுகளுக்கும் விரிவு படுத்தினார். அதே ஆண்டில் சுற்றுலாப் பயணியரைப் பாரிசுப் பொருட்காட்சிக்கு அழைத்துச் சென்று, சாதனை புரிந்தார். லண்டனில் நடந்த கண்காட்சியைக் காண 1,50,000 பயணியர் இரயிலில் பயணம் சென்றனர்.

**புல்மேன் கோச் :** இங்கிலாந்திற்கு அடுத்த படியாக, பிற ஐரோப்பிய நாடுகளிலும் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. 1870-இல் அமெரிக்காவில் 'புல்மேன் கோச்சுகள்' எனும் ஆடம்பரமிக்க ரயில் கோச்சுகள் அறிமுகப்படுத்தப் பட்டதால், நீண்ட தூரப்பயணங்களைப் பயணியர் வசதியாகச் செய்ய முடிந்தது. இம் முதல்தரமான ரயில் பயணம் G.M. புல்மேன் என்பாரால் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டதால் அவரது பெயராலேயே இது புல்மேன் கோச் என்று அழைக்கப்பட்டது. இக்கோச்சுகள் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆங்கிலேயர் இந்தியாவிலும் ரயில் பாதைகளை அமைத்தனர். 1853-4-16 ஆம் நாள் முதல் ரயில் பம்பாயிலிருந்து தானாவிற்கு விடப்பட்டது. இதில் 400 பயணிகள் பயணம் செய்தனர். இன்று இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் இரயில் ஓடிக்கொண்டுள்ளது.

உலகம் முழுவதிலும் இரயில் பயணங்கள் தொடங்கப்பட்டு, நவீன ரயில் துரித வண்டிகள் விடப்பட்டுள்ளதால் சுற்றுலா நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது. அண்மைக்காலத்தில் மின்சாரத் தொடர் வண்டிகள் (Electirc Trains) பயணிரை மகிழ்விக்கின்றன.

**கப்பல் போக்குவரவு :** நீராவி சக்தியின் பயன்பாடு போக்குவரத்தில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது. 1769-இல் ஜேம்ஸ் வாட் நீராவி எந்திரத்தைக் கண்டு பிடித்தார். 1783-இல் ஜாப்ரே சிறிய அளவிலான நீராவிப் படகினை உருவாக்கினார். 'நீராவி கப்பல் போக்குவரத்தின் தந்தை' எனப் போற்றப்பெறும் அமெரிக்காவின் ராபர்ட் புல்டன் என்பார், வணிகமுறையிலான நீராவிக் கப்பல் போக்குவரத்திற்கு வித்திட்டார். இருப்பினும் நீராவிக் கப்பல் போக்குவரத்தில் மாபெரும் சாதனையைப் படைத்தவர் இங்கிலாந்தின் என்ஜினியர் சாம்பர்ட் கிங்டன் புருநெல் ஆவார். இவர் 'தி கிரேட் வெஸ்டர்ன்' (The Great Western) எனும் சக்தி வாய்ந்த கப்பலைச் செலுத்தி, கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்தார். பின்னர் உலகம் முழுவதும் கப்பல் போக்குவரவு பெரும் செல்வாக்கு பெற்றது. கப்பலில் குறைந்த செலவில் அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளப்பட்டதால், ஆகாய விமானம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரும் கப்பல் பயணத்தின் செல்வாக்கு குறையவில்லை. அடுத்து பனாமா கால்வாய், கீழ்க்கால்வாய் சூயஸ்கால்வாய் - முதலான கால்வாய்கள் கப்பல் பயணங்களைப் பெரிதும் ஊக்குவித்தன. உலகின் பல பகுதிகளில் வசதியும் ஆடம்பரமும் கொண்ட 'மிதக்கும் நகரங்கள்' உருவாக்கப்பட்டன. கப்பல் பயணங்கள், சுற்றுலாப் பயணியரைப் பெரிதும் கவர்ந்து, சுற்றுலா வளர்ச்சிக்கு வழி வகுத்தன.



**சாலைப் போக்குவரவு :** இரயில், கப்பல் கண்டுபிடிப்புகளைப் போன்று, கார்களின் கண்டுபிடிப்பும் சுற்றுலா வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தது. தொலை தூர இடங்களுக்கும், மூலை முடுக்கெல்லாம் செல்வதற்கும் கார்களே பயன்படுத்தப்பட்டன. ஸ்டுடிபேக்கர் சகோதரர்கள், லூயிஸ் ரெனால்டு, கார்ல்பென்ஸ் ஆகியோர் 20 மைல் வேகம் செல்லும் கார்களைக் கண்டுபிடித்தனர். 1860-இல் பிரான்சு நாட்டின் ஜீன் எட்வின் லினார், வாயு (Gas) மூலம் இயங்கும் காரையும், 1865-இல் ஆஸ்திரிய நாட்டு சீபிரட் மார்க்கஸ், பென்சைன் மூலம் இயங்கும் காரையும் கண்டு பிடித்தனர். 1873-இல் பெட்ரோல் என்ஜின் பொருத்தப்பட்ட கார் அறிமுகப் படுத்தப்பட்டது. நிக்கோலஸ் ஆட்டோ, கார்ல்பென்ஸ் ஆகிய இருவரும் காரில் பல சீர்திருத்தங்களைச் செய்து புதிய மாடல் காரை உற்பத்தி செய்தனர். இதனால் குறைந்த செலவில் அதிகமான இடங்களுக்குச் செல்ல முடிந்தது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கார்கள் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் முதலாம் உலகப் போரின் காலம் வரை இதன் உற்பத்தி பெருகவில்லை. அடுத்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சுற்றுலாப் பயணியர் கப்பல், இரயில் ஆகியவற்றில் பயணம் செய்வதையே பெரிதும் விரும்பினர். எனவே கி.பி.19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை கார்ப் பயணங்கள் செல்வாக்கு பெறவில்லை என்றே கருதலாம்.

**நெடுஞ்சாலைகள் :** கார்களின் உற்பத்தியில் சாதனைகள் நிகழ்ந்த அதே காலத்தில் சாலை வசதிகளும் பெருகின. நாடெங்கிலும் அகலமான சாலைகள் போடப்பட்டன. நெடுஞ்சாலைகளும் பல உருவாயின. எடுத்துக்காட்டாக ஏழு நாடுகளை இணைக்கும் நெடுஞ்சாலைகளும், பதினைந்து நாடுகளை இணைக்கும் நெடுஞ்சாலைகளையும் சுட்டலாம். அதிநவீன கார்களின் உற்பத்தியும் சாலைகளின் முன்னேற்றமும் சுற்றுலா மேம்பாட்டிற்கு அடிகோலின.

**விமானப் போக்குவரவு :** விமானப் போக்குவரத்தால் உலகமே சுருங்கிவிட்டது எனலாம். ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்த காலமுதல் இன்றுவரை ஜெட் விமானங்கள், போயிங் 747 விமானங்கள், சூப்பர் சானிக் மின்னல் வேக விமானங்கள் முதலான அதிநவீன சொகுசு விமானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பன்னாட்டுச் சுற்றுலா வெகு வேகமாக முன்னேற்றமடைந்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே விமானப் பயணம் செல்வாக்கு பெற்றது என்பதனை மறந்து விடக்கூடாது. விமானங்கள் பற்றிய விரிவான செய்திகள் **போக்குவரத்து, சுற்றுலாப் பயணிகளின் செலவினங்கள் பற்றிய ஆய்வு** - எனும் தலைப்புகளில் கூறப்பட்டுள்ளன.

இதுகாறும் கூறியவற்றான் தொழிற்புரட்சிக்குப் பின்னர் தோன்றிய தொழில் நுட்ப வளர்ச்சியால் இரயில், கப்பல், சாலை, விமானப் போக்குவரத்துகள் மாபெரும் வளர்ச்சிகளைப் பெற்றன என்பதனை அறிந்தோம். இதன் விளைவாக சுற்றுலாவும் நல்ல வளர்ச்சி பெற்றது.

## ஈ. இருபதாம் நூற்றாண்டு (நவீன காலம்)
## (Tourism in Modern Period)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பன்னாட்டளவில் சுற்றுலா வளர்ச்சி பெற ஆரம்பித்தது. சாலை, இரயில், விமானப் போக்குவரத்துக்களில் ஏற்பட்டுள்ள அதிநவீன முன்னேற்றங்கள், அறிவியல் முன்னேற்றம், மனிதனின் இன்ப நாட்டமும் அரிய, பெரியனவற்றைக் கண்டுகளிக்கும் பேரார்வமும், கல்வி ஆராய்ச்சியில் நாட்டமும், அயல்நாட்டு மக்களின் நடைஉடை பாவனைகளை நேரில் காணும் ஆர்வமும் - சுற்றுலாவின் தூண்டு சக்திகளாக உள்ளன. இன்று அதிவிரைவில் அயல்நாடுகளுக்குப் பத்திரமாகச் சென்று திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதால் பலரும் சுற்றுலாவில் நாட்டம் கொண்டுள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இன்ப நோக்கிற்காகப் பயணம் செய்யும் நிலை வளர்ந்தது. இருப்பினும் முதல் கால் நூற்றாண்டுகளில், பணம் படைத்தோர் மட்டுமே சுற்றுலாவில் பங்குபெறும் நிலை இருந்தது. காரணம் சுற்றுலாக்கள் அன்று ஆடம்பரமிக்கதாகவே கருதப்பட்டது; அதிக பணச் செலவுமிக்கதாகவும் இருந்தது. ஆடம்பரமான புல்மேன் கோச்சுகளைக் கொண்ட நவீன மயமான நீண்ட தூர இரயில்களான க்வீன் மேரி, கோரியண்ட் எக்ஸ்பிரஸ், ப்ளூ ரைபேண்ட் - ஆகியவை சுற்றுலாப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.



அடுத்து நகரங்களும் தொழில்களும் வளர்ச்சி பெற்றதனால், நகரங்களில் வாழ்ந்த சிலரது பொருளாதார நிலை உயர்ந்தது. அவர்களது வாங்கும் சக்தியும் (Purchasing Power) அதிகரித்தது. எனவே இவர்கள் ஆடம்பரச் சுற்றுலாக்களில் ஈடுபடுவதில் ஆர்வம் கொண்டனர். அடுத்து கவர்ச்சிகரமான ஒருங்கமைக்கப்பட்ட சுற்றுலாக்கள், விடுமுறை நாள் மகிழ்வுப் பயணங்கள், குடும்பத்துடன் இளைப்பாறச் செல்லும் இன்பப் பயணங்கள் ஆகியன மக்களின் கவர்ச்சிக் கன்னிகளாகத் திகழ்ந்தன. சுற்றுலா வணிகமும் வளர்ந்தது. இருப்பினும் பெரும்பான்மையான மக்கள் சுற்றுலாவின் சுகங்களை அனுபவிக்க இயலவில்லை.

### முதலாம் உலகப் போரும் சுற்றுலாவும்

அமைதியான காலங்களில் மட்டுமே சுற்றுலா வளரும் தன்மை உடையது. எனவே 1914-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதலாம் உலகப் போரின் காலக் கட்டத்தில் சுற்றுலாவில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. உலகின் பல பகுதிகளில் பயங்கரமான போர்கள் நடந்து கொண்டிருந்ததால் சுற்றுலாப் பயணிகள் தமது இருப்பிடத்தைவிட்டு வெளியே புறப்பட அச்சம் கொண்டனர். இதன் விளைவாக உலகெங்கும் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை வீழ்ந்தது. போர் முடிந்த பின் மீண்டும் சுற்றுலாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

### முதலாம் உலகப்போருக்குப் பின் சுற்றுலா

முதலாம் உலகப்போரின் விளைவாக நாடுகளின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டன. தேசீய உணர்வுகள் மேலோங்கின. இந்நிலையில் நாடுகளுக்கிடையே நிலவிய தடைகளை உடைத்தெறியும் கருவியாகவும் சுற்றுலா விளங்கியது. சுற்றுலாவினால் பன்னாட்டுப் பயணங்களும் அதிகரித்தன. பத்திரிக்கை, வானொலி, செய்தித் தொடர்பு சாதனங்கள் வளர்ந்தன. எனவே ஒரு நாட்டிலுள்ள மக்கள் பிற நாடுகளைப் பற்றியும் மக்கள் வாழ்க்கை பற்றியும் தெரிந்து கொள்ள முடிந்தது. அடுத்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்களின் நிலையும் மத்திய வர்க்கத்தினரின் பொருளாதார நிலையும் உயர்ந்தன.

போருக்குப் பின்னர் விமானங்கள், பேருந்துகள், தனியார் கார்கள் முதலான போக்குவரத்து சாதனங்கள் பெருவளர்ச்சியுற்றன. போர்க்காலத்தின் போது பயன்படுத்துவதற்காக கார்களிலும், விமானங்களிலும் புதிய நுணுக்கங்கள் புகுத்தப்பட்டன. இவை போருக்குப் பின் மக்களின் பயணத்திற்குப் பயன்பட்டன. துரிதப் பயணத்திற்காக பல நெடுஞ்சாலைகள், எக்ஸ்பிரஸ் மற்றும் சூப்பர் நெடுஞ்சாலைகள்

அமைக்கப்பட்டன. பயணம் விரைவில் நடைபெற்றதால் நேரம் மிச்சமானது. இதன் விளைவாக குறைந்த விடுமுறைக் காலத்திலும் தொலை தூரப் பகுதிகளுக்குக் கூட சுற்றுலா செல்ல ஏதுவானது.

**ஊதிய விடுமுறைகள்:** தொழிலாளர்களுக்கு ஊதிய விடுமுறைகள் விடப்பட்டதன் விளைவாக, சுற்றுலா பெரு முன்னேற்றம் கண்டது. 1936 இல் பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் ஊதிய விடுமுறைகளை ஊக்குவிக்கும் மரபினை ஏற்றுக் கொண்டது. எனவே பெரும்பாலான நாடுகள் தொழிலாளர்களுக்கு ஒன்று முதல் நான்கு வாரங்கள் வரை ஊதிய விடுமுறையை அனுமதித்தது. பன்னாட்டளவில் ஐநூறு மில்லியனுக்கும் மேற்பட்ட உழைப்பாளிகள் ஊதிய விடுமுறையை அனுபவிக்கின்றனர். எனவேதான் இன்றும் சுற்றுலாப் பயணியருள் பெரும்பாலோர் மேலை நாட்டுத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினர்களுமே உள்ளனர். இதனால் ஊதியத்துடன் கூடிய விடுமுறைகள் நவீன கால சுற்றுலா வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்ததனை அறியலாம்.

இதுபோன்ற சாதகமான சூழ்நிலையில் சுற்றுலா உலகெங்கும் வளர்ச்சியுற்றது. 1930-களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. 1929இல் இருபது லட்சம் சுற்றுலாப் பயணிகள் ஆஸ்திரியாவிற்குச் சென்றுள்ளனர். சுவிட்சர்லாந்திற்கு பதினைந்து லட்சம் பயணியரும், இத்தாலிக்குப் பத்து லட்சம் பயணியரும் சென்றனர். இதனைப் போன்று இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்தனர்.

**மோட்டார் கார்களும் சாலைப் போக்குவரத்தும்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும்பாலான பயணிகள் ரயில் வண்டிகளிலும் கப்பல்களிலும் பயணம் செய்தனர் என்பதனை முன்பே கண்டோம். மோட்டார் கார்களும் சொகுசுப் பேருந்துகளும் அதிகரித்த அதே காலத்தில், சாலை வசதிகளும் பெருகியதால் விடுமுறை காலச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் பெருகியது. 1930-களில் ஜெர்மனியில் சாலை வசதிகள் அதிவேகத்தில் முன்னேறியது. இதன் விளைவாக பிரான்ஸ், ஸ்பெயின் முதலான நாடுகளிலும் சாலை வசதிகள் விரிவாக்கப்பட்டன. எனவே இந்நாடுகளில் பயணம் பெரிதும் பெருகியது.

**நெடுஞ்சாலைகள்:** இந்நாடுகளைப் பின்பற்றிப் பல நாடுகளில் அகன்ற, புதிய சாலைகள் போடப்பட்டன. ஆப்பிரிக்காவின் மத்திய பகுதிகளை இணைப்பதற்காக 6596 கி.மீ தூரத்திற்கும், செக்கஸ்லோவாக்கியாவில் 1700 கி.மீ தூரத்திற்கும், பல்கேரியாவில் 1100 கி.மீ தூரத்திற்கும் சாலைகள் அமைக்கப்பட்டன. இந்தியா, இந்தோனேஷியா, பர்மா, கம்போடியா, மலேசியா முதலான ஆசிய நாடுகளில் மொத்தம் 66,000 கி.மீ தொலைவிற்கு சாலைகள் போடப்பட்டன. வட அமெரிக்காவின் அலாஸ்காவிலுள்ள ஃபெயர்பேங்ஸ் எனும் நகரத்திலிருந்து தென் அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள டியாரா டெல்பியூகோ வரை 23000 கி.மீ நீளமுள்ள நெடுஞ்சாலைகள் போடப்பட்டன.



இவற்றைப் போன்று ஏழு ஆப்பிரிக்க நாடுகளை இணைக்க ஓர் நெடுஞ்சாலையும் ஆசியாவில் 15 நாடுகளை இணைக்க ஓர் நெடுஞ்சாலையும் போடப்பட்டன.

சாலைப் போக்குவரத்து முன்னேறியதால் கார்களும் பேருந்துகளும் பேரளவில் உற்பத்தியாயின. அமெரிக்கர்களான நெல்சன், ஜாக்சன் இருவரும் பிரான்சிஸ் கோவிற்கு ஏறத்தாழ 4500 கி.மீ காரில் பயணம் செய்தனர்.

**இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் சுற்றுலா**

தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்த சுற்றுலா, 1939- இல்தோன்றிய உலகப் போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. சில நாடுகளில் மக்கள் வெளியே நடமாட முடியாத அளவிற்கு குண்டு வீச்சுகள் நடைபெற்றன. போர் விமானங்கள் பறந்த வண்ணம் இருந்தன. இக்காலக் கட்டத்தில் உலகின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் வீழ்ந்தன. எனவே சுற்றுலா வளர்ச்சி தடைப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் போர்க்களமாயின; இரணகளமாயின. எனவே சுற்றுலாக் கவர்ச்சிகள் மிகக் கொண்ட ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியவில்லை.

**இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சுற்றுலா**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக நாடுகளில் அமைதி ஆட்சி புரிந்தது. எனவே சுற்றுலா அசுர வேகத்தில் வளர ஆரம்பித்தது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை பன்மடங்கு உயர்ந்தது. 1955 முதல் 1965 முடிய அதாவது பத்தாண்டு காலத்தில் 65 நாடுகளில் வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 51 மில்லியனிலிருந்து 157 மில்லியனாக மும்மடங்கு பெருகியதாக ஐக்கிய நாடுகளின் அவை அறிவித்துள்ளது. 1965 தொடங்கி 1989 வரையிலான காலக் கட்டத்தில் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை ஆண்டுக்குச் சராசரியாக 7 விழுக்காடு கூடியது.

இக்காலக் கட்டத்தில் தொழில் வளமிக்க நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் உச்ச கட்டத்தில் இருந்தது. இக்காலத்தில் முன்னேறிக் கொண்டுள்ள நாடுகளும் சுற்றுலா மூலம் நல்ல வருவாயைப் பெற்றன.

பொதுவாகவே சுற்றுலா வளர்ச்சியானது மக்களின் வாங்கும் சக்தியை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அதே சமயத்தில் உலகில் ஏற்படுகின்ற சிக்கல்கள், பிரச்சனைகள், பொருளாதார நெருக்கடிகள், பஞ்சம் ஆகியவை சுற்றுலா வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக அமைவன. 1973 ஆம் ஆண்டின் இறுதியில் எரிபொருள் சிக்கல் (Energy crisis) உருவானதால் 1974 இல் உலகின் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளானது. இதன் காரணமாக பணவீக்கம் ஏற்பட்டு மக்களின் வாங்கும் சக்திக் குறைந்து போயிற்று. இவற்றின் விளைவாக சுற்றுலா வளர்ச்சி தடைப்பட்டது. தொழில் துறை முன்னேற்றம் கண்ட நாடுகளின் தீவிர முயற்சிகளால் பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு மீண்டும் சகஜநிலை வந்தது. எனவே 1975க்குப் பின் சுற்றுலா மறுமலர்ச்சி பெற்றது; வளர ஆரம்பித்தது. இதன் விளைவாக 1976 இல் பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 222 மில்லியனாகவும், 1979 இல் 270 மில்லியனாகவும், 1990 இல் 430 மில்லியனாகவும் உயர்ந்தது.

சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கையில் ஐரோப்பாவும் வடஅமெரிக்காவும் என்றும் போல் முன்னணியில் உள்ளன. பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளில் 70% ஐரோப்பிய நாடுகளுக்கும், 20% வடக்கு அமெரிக்காவிற்கும் சென்றுள்ளனர்.

தொழில் வளர்ச்சியில் முன்னணி வகித்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுலா வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டது. பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 80% இந்நாடுகளுகளிலிருந்து சென்றுள்ளனர்; அதனைப் போன்று இந்நாடுகளுக்கும் வந்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, கனடா, பெல்ஜியம், இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், டென்மார்க், ஆஸ்திரியா ஆகிய பன்னிரெண்டு நாடுகளிலிருந்து தான் சுற்றுலாப் பயணியர் அதிகளவில் சென்றுள்ளனர். இதனை ஐக்கிய நாடுகள் அவையின் குறிப்புத் தெரிவிக்கிறது. இவற்றுள் அமெரிக்காவும் ஜெர்மனியும் தலா 21 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அனுப்பியுள்ளன.



## தற்காலப் பயணியர் (இந்தியா)

ஆங்கிலக் கல்வியும், ஆங்கில ஆட்சியும் பணக்காரர் பலரை அயல் நாடுகளில் கல்வி கற்கத் தூண்டின. எனவே இடைக்காலத்தில் ஐரோப்பியர் பலர் இந்தியாவிற்கு வருகை புரிந்ததைப் போன்று, இந்தியரும் அயல் நாட்டுப் பயணம் மேற்கொண்டனர். பல இளைஞர்கள் மேலை நாட்டிற்குச் சென்று மேலை நாட்டு நடையுடை பாவனைகளைக் கற்றனர். ராஜாராம் மோஹன்ராய், சுபாஷ் சந்திர போஸ் போன்றோர் ஐசிஎஸ் தேர்வில் வெற்றி பெற்றனர். ஜமீன்தார்களும், மஹாராஜாக்களும் ஐரோப்பிய நாடுகளுக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்டனர். இந்தியாவின் பல வகையான கலைச்சின்னங்கள் அயல் நாட்டுப் பயணியரைக் கவரும் காந்தங்களாக விளங்கின. இவற்றுள் தாஜ்மஹால், கோவா, அஜந்தா, எல்லோரா குகை ஓவியங்கள், கஜீராகோவின் பாலியல் தொடர்பான சிற்பங்கள், உதகை முதலான மலை வாழிடங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கன.

அதிகப் படியான அயல்நாட்டுப் பயணியரைக் கவர 1945,-இல் சர்ஜான் சார்ஜன்ட் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. 1949-இல் சுற்றுலா வளர்ச்சிக்காக சுற்றுலாப் போக்குவரத்திற்காகத் தனி அலுவலகங்கள் திறக்கப்பட்டன. 1958-இல் சுற்றுலா, தனித்த துறையாக அறிவிக்கப்பட்டது. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்கள் உருவாயின. இன்று நம் நாட்டிற்கு வருவாய் தேடித்தரும் தொழில்களுள் சுற்றுலாத்துறை மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது. இந்தியப் பண்பாட்டுச் சுற்றுலா இன்று மேன்மை யடைந்துள்ளது.

தற்காலப் பயணியர் பலர் உள்ளனர். இங்கே இந்தியப் பயணி ஒருவரைப் பற்றிக் காண்போம்.


### மஹா பண்டித இராகுல் சாங்கிர்தியாயன் (1893-1963)

முப்பது மொழிகள் கற்ற இவர் அறிவியல், தொல்லியல், வரலாறு, சமூகவியல், சமயவியல், உளவியல், இலக்கியம் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். சுற்றுலா செல்லுதல் இவரது தொழில்.

இமய மலையை உயிராகக் காதலித்த இவர், இம்மலையின் மூலை முடுக்கெல்லாம் சென்று ரசித்துள்ளார். இந்தியாவில் காசி, கல்கத்தா, ஹரித்வார், ரிஷிகேஷ், கங்கோத்திரி, யமுனோத்திரி, கேதார்நாத், கௌரிகுண்ட், பூரி, ராமேஸ்வரம், திருப்பதி, புனே, மும்பை, நாசிக், ஆக்ரா, லாகூர், ராவல் பிண்டி, நேபாளம், பீகார், டார்ஜிலிங் முதலான இடங்களில்

தங்கிப் பார்வையிட்டுள்ளார். ஸ்ரீலங்கா, திபெத், சீனா, நேப்பாளம் முதலான நாடுகளுக்கும் பல ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கும் சுற்றுலா சென்றுள்ளார். இரஷ்யாவில் இவர் சில ஆண்டுகள் வசித்தார். இவர் பல நூல்களைஎழுதியதுடன் சில அகராதிகளையும் தொகுத்துள்ளார். இவரது நூல்களுள் 'வால்கா முதல் கங்கை வரை' "ஊர்சுற்றிப் புராணம்" (குமர்க்கட் ஜிக்ஞாசா) ஆகியன புகழ்பெற்றவை. 'உலகில் சிறந்த மதம் ஊர் சுற்றும் மதம்தான்' என்பது இவரது கருத்து. ஊர் சுற்றுவதைத் தொடர்ந்து செய்ய இவர் வேண்டுகோள் விடுக்கிறார். அடுத்து

"நாம் ஊர் சுற்றுவதைப் பின்பற்றாததால் தான் 700 ஆண்டுகளாக அந்நியரிடம் அடிமைப்பட நேர்ந்தது. ஊர் சுற்றுபவர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை கிடைக்கும். ஊர் சுற்றுவதை மறந்தவர்களுக்கு நரகத்தில் கூட இடம் கிடைக்காது" எனவும் சாங்கிர்த்தியாயன் கூறுவார்.



செஞ்சி மணிக்கூண்டு

# 4. பன்னாட்டுப் பொருளியல் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம்

## (THE IMPACT OF TOURISM ON INTERNATIONAL ECONOMIC ACTIVITY)

**முன்னுரை :** ஏற்றுமதி சம்மந்தப்பட்ட தொழில்களுள் சுற்றுலாத் தொழில் மிகவும் முக்கியமானது. ஏற்றுமதியைப் போலவே சுற்றுலாத் தொழிலிலும் பெருமளவில் அந்நியச் செலவாணி கிடைக்கிறது. உலக மொத்த ஏற்றுமதியின் மதிப்பில் சுற்றுலாத் தொழிலின் பங்கு 8% ஆக உள்ளது. உலக அளவிலான சுற்றுலாத் தொழில் வர்த்தக மதிப்பு 350 மில்லியன் அமெரிக்கா டாலர்களாக உள்ளது. சுற்றுலா ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறது. அடுத்து சுற்றுலா ஒரு நாட்டின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றது. அதுவே பன்னாட்டு வாணிகத்தின் இரண்டாவது பெரிய பொருளாதாரச் செயல்பாடாக உள்ளது. அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்து, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்ய உதவுவதும் சுற்றாலவே ஆகும். இது தனிமனித வருமானத்தையும், தேசிய வருமானத்தையும் பெருக்குகிறது. தேசிய ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரிவதுடன் உலக சமாதானத்திற்கும் உறுதுணையாக உள்ளது. பல நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் சுற்றுலா அதிக வருமானத்தை ஈட்டித் தருகின்றது. இவ்விதமாக சுற்றுலாவின் மூலம் வரும் வருமானம் வளரும் நாடுகளின் வருமானத்தின் முக்கியஆதாரமாகத் திகழக்கின்றது. எனவே பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது என்பதனை அறியலாம்.

25-8-2000 த்தன்று புதுடெல்லியில் நடந்த இந்தியா சுற்றுலா அமைப்பாளர் சங்கத்தின் 16வது ஆண்டு மாநாட்டில், மத்திய சுற்றுலாத்துறை அமைச்சா் அனந்தகுமாரும், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சா் அருண்ஜெட்லியும் கலந்து கொண்டனா். அதுபோழ்து ஜெட்லி "நாட்டின் மொத்த உற்பத்திக் குறியீட்டை அதிகரிப்பதில் சுற்றுலாவின் பங்கு மகத்தானது. நாட்டின் பொருளாதார நிலைத் தன்மையை சுற்றுலாத்துறை தனது தோளில் தாங்குகிறது" என்று குறிப்பிட்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. (தினமலா் 28-8-2000)

சுற்றுலா கேடுகளற்ற, பாதுகாப்பான நவீனத் தொழில். இத்தொழில் குறைந்த மூலதனத்துடன் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகிறது. டாக்டர் சுதாமன் சிங், டாக்டர் எம்.சி.வைஸ் போன்ற பொருளாதார நிபுணர்கள் 'பன்னாட்டுப் பொருளாதாரம் - நாடுகளின் பொருளாதாரத் தொடர்புகளினால், பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் ஏற்படும் விளைவேயாகும்' எனக் கருதுவர். பல்வேறு நாடுகளிடையே ஏற்படும் அந்நியச் செலவாணி சேவைகள் போன்றவைகளே பொருளாதாரச் செயல்பாடுகள் ஆகும்.

உள்நாட்டுச் சுற்றுலாவினால் பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் எவ்விதத் தாக்கமும் நிகழ்வதில்லை. ஆனால் பன்னாட்டுச் சுற்றுலாவினால் பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்கத் தாக்கம் ஏற்படுகிறது. சுற்றுலா இன்று ஒரு பொருளியல் செயல்பாடாக வளர்ந்துள்ளது. ஆன்ட்ருசிக் என்பார் "சுற்றுலா தற்காலப் பொருளாதாரத்தின் நான்காவது பரிமாணம்" எனக் கூறுவாா்.

பயணிகள் தங்கள் நாட்டில் சம்பாதித்த தங்களது பணத்தை அயல்நாட்டுப் பயணத்தின்போது தாங்கள் செல்லுகின்ற நாடுகளில் செலவழிக்கின்றனா். இந்தியச் சுற்றுலாக் குழுவினா் சிங்கப்பூருக்குச் சுற்றுலா செல்வதாக வைத்துக் கொள்வோம். அவா்கள் இந்தியப் பணத்தைக் கொடுத்து, அயல்நாட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். சிங்கப்பூரில் தங்கவும், சாப்பிடவும், பொழுது போக்கவும், காா்களில் பயணம் செய்யவும், நினைவுப் பொருள்கள் வாங்கவும், இவா்கள் பெரும் பொருளைச் செலவிடுகின்றனா். இவ்வாறு செய்யப்படும் செலவுகளின் மூலம் ஈட்டப்படும் அயல்நாட்டுப் பணவரவால் பன்னாட்டு வாணிகச் சமநிலை, செலுத்துதல் சமநிலை, அந்நியச் செலாவணி ஆகியவற்றில் பெருத்த மாற்றங்கள் நிகழ்கின்றன. இவை பன்னாட்டுப் பொருளாதாரச்



செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அடுத்து சுற்றுலா உலக நாடுகளின் வருமானத்திற்குப் பெரும் ஆதாரமாக உள்ளது.

எடுத்துக்காட்டாகச் சுற்றுலாத் தொழிலின் மூலம் 1996 இல் சீனா 12.1 பில்லியன் டாலா்களையும் ஹாங்காங் 10.8 பில்லியன் டாலா்களையும் தாய்லாந்து 8.7பி. டாலா்களையும், சிங்கப்பூா் 7.9 பி. டாலா்களையும் ஆனால் இந்தியா 3 பி டாலா்களையும் வருவாயாகப் பெற்றதையும் சுட்டலாம்.

**தொழில் தகுதி :** பல நாடுகளில் சுற்றுலா இன்று ஓா் தொழிலாகவே வளா்ந்துள்ளது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சுற்றுலாவே முக்கிய காரணமாக உள்ளது என்பதனை உணா்ந்த தேசிய வளா்ச்சிச் சபை (National Development Council) 1984 இல் சுற்றுலாவிற்குத் தொழில் தகுதியை (அந்தஸ்தை) வழங்கியுள்ளது. இன்று பெரும் பாலான நாடுகள் சுற்றுலா வளா்ச்சியின் மூலம் கணிசமான வருவாயைப் பெறுகின்றன. இவ்வருவாய் அந்நாடுகளின் மற்ற ஏற்றுமதிப் பொருள்களின் மொத்த வருமானத்தில் குறிப்பிடததக்கதோா பங்கினை வகிக்கிறது. இவ்வாறு ஒரு நாட்டின் பொருளாதார வளா்ச்சியிலும் அந்நியச் . செவாணியைச் சம்பாதித்துத் தருவதிலும் சுற்றுலாப் பெரும் பங்கு வகித்து வருகிறது. 1992ஆம் ஆண்டில் மட்டும் அனைத்து நாடுகளும் சுற்றுலாவின் மூலம் 205 பில்லியன் ருபாய்களைச் சம்பாத்தித்துள்ளன. அயல்நாட்டுப் பயணிகளிடமிருந்து கிடைக்கும் தொகை, ஒரு கையிலிருந்து அடுத்த கைக்குக் கிடைக்கும் தொகை. ஒரு கையிலிருந்து அடுத்த கைக்கு மாறி, அங்கிருந்து பல கைகளுக்கு மாறுவதால் அவற்றின் மதிப்பு பன்மடங்காகப் பெருகிறது. இதன் பெருக்கம் விரைவாகவும் உள்ளது. ஒவ்வொரு ருபாயும் 3.2 மடங்கிலிருந்து 4.3 மடங்கு வரைப் பெருகுவதாக அண்மைக் கால கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. அவ்வாறெனில் உலக நாடுகள் ஈட்டியுள்ள 205 பில்லியன் ருபாய்கள் 656 பில்லியனிலிருந்து 882 பில்லியன் ருபாய்கள் வரை மதிப்புடையது என்பது அறியப்படுகின்றது.

**அந்நியச் செலாவணியைப் பெறுதல்**

இன்று உலக அளவிலான சுற்றுலாத் தொழில் வா்த்தக மதிப்பு 350 மில்லியன் அமெரிக்க டாலா்களாக இருக்கிறது. உலக நாடுகள் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியாின் வசதிக்காகப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த சொகுசு காா், நவீன ஆகாய விமானம் போன்றவற்றிற்காகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. அடுத்து தன் நாட்டவா் அயல்நாடுகளில் சுற்றலா மேற்கொண்டு செலவழிக்கும் தொகையும் உள்ளது. அந்த இரண்டு செலவுத் தொகைகளையும் கழித்து

லாபமாகும். இந்நிகர போக எஞ்சியுள்ள தொகையே உலகநாடுகளின் நிகர லாபம் வளரும் நாடுகளில் அதிகமாகவே உள்ளது. எனவே சுற்றுலாவின் மூலம் வளரும் நாடுகளும், பின்தங்கிய நாடுகளும் பெருமளவில் அந்நியச்செலாணியை ஈட்டி வருகின்றன என்பது புலனாகும். நம்நாடு 1987-88 இல் 1856.1 கோடி ரூபாய்கள், 1988-89 ஆம் ஆண்டில் 2103 கோடி ரூபாய்கள் 1989-90 இல் 2456 கோடி ரூபாய்கள் மதிப்புள்ள அந்நியச் செலவாணியைச் சுற்றுலாத் துறையின் மூலம் ஈட்டியுள்ளது. 1999 இல் ஒரு அயல்நாட்டுப் பயணி நம் நாட்டில் சராசரியாக ரூ. 16,000 செலவழிக்கிறார்.

**ஆஸ்திரியா, கிரீஸ், போர்ச்சுகல்.**

இன்று உலகில் பல நாடுகள், சுற்றுலா வருமானத்தையே முதன்மையாகக் கொண்டுள்ளன. எடுத்துக் காட்டாக ஸ்பெயின், மெக்சிகோ, ஜோர்டன், பனாமா முதலான நாடுகளைச் சுட்டலாம். பிரிட்டன். அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பிற பொருள்களைக் காட்டிலும், சுற்றுலாவின் மூலமே அதிக டாலர்களைப் பெறுகிறது. கனடாவும் செய்தித்தாளுக்கு (News Print) அடுத்த நிலையில் சுற்றுலாவின் மூலமே அதிகமான அந்நியச் செலவாணியைப் பெறுகிறது. பலநாடுகள் அண்மைக் காலத்தில் சுற்றுலாத்துறையை விரிவுப்படுத்திப் பெரும்பொருள் ஈட்டுகின்றன. இன்று 24 நாடுகளில் ஏற்றுமதி செய்யப்படும் மூன்று முக்கிய பொருட்களில் சுற்றுலாவும் ஒன்றாகத் திகழ்கிறது. எனவே இன்று பல நாடுகள் தங்களது பொருளாதார நிலையை வலுப்படுத்த,சுற்றுலாத் தொழிலையே நம்பியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி சில நாடுகளின் கண்ணுக்குப் புலனாகாத வருவாயில் சுற்றுலா வருவாயே முதன்மையாக உள்ளது. எடுத்துக்காட்டாக இத்தாலி, கனடா, ஆஸ்திரியா, மெக்ஸிகோ, ஸ்பெயின் முதலான நாடுகளைச் சுட்டலாம். இந்நாடுகள் சுற்றுலா வளர்ச்சியின் மூலம் அன்னிய செலாவணியைக் குவிக்கின்றன.

**வேலை வாய்ப்பு**

சுற்றுலா ஒரு நாட்டின் வருவாயைப் பெருக்குவதுடன் பலருக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறைகிறது. பன்னாட்டளவில் பல்வேறு தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் ஏழு சதவிகிதத்திற்கு மேற்பட்டோர் சுற்றுலாத்துறையில் பணிபுரிகின்றனர் என்று அறிஞர் லிகோர்ஸ் என்பார் கணித்துள்ளார். பிற தொழில்களைக் காட்டிலும் சுற்றுலாத் தொழில் அதிகப் பேர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்குகிறது. சுற்றுலாத் தொழிலில் வேலையாட்கள் முதலீடு விகிதமானது



மற்ற தொழில்களைக் காட்டிலும் அதிகம். எடுத்துக்காட்டாக 10,00,000 ரூபாய் முதலீடு செய்தால் (1985-86 ஆம் ஆண்டின் விலையின் அடிப்படையில்) சுற்றுலாத் தொழிலில் 89 ஆட்களுககு வேலை கொடுக்கமுடியும். விவசாயத்துறையில் 45 ஆட்களுக்கும், உறபத்தித் தொழில் துறையில் 13 ஆட்களுக்கும் வேலை கொடுக்க இயலும். இதனால் விவசாயம் மற்றும் உற்பத்தித் தொழில்களை விட, சுற்றுலாத் தொழிலில் அதிக அளவிலான வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றது என்பதனை அறியலாம்.

உலகச் சுற்றுலா வர்த்தகத்தில் நம் பாரதத்தின் பங்கு 0.4 சதவிகிதமாக உள்ளது.

சுற்றுலாத்துறை நேரடியாகவும் மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறது. எடுத்துக்காட்டாக சுவிட்சர்லாந்தில் விடுதிகள், உணவகங்கள், விமான நிலையங்கள், ரயில்கள் மற்றும் போக்குவத்து நிறுவனங்களில் மட்டும் ஆறு சதவிகிதத்தினர் பணிபுரிகின்றனர். இதுபோன்ற நேரடி வேலை வாய்ப்புடன்,சுற்றுலாத் தொடர்பான நிறுவனங்களில் மறைமுக வேலை வாய்ப்பிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் ஆண்களும் பெண்களும் அடங்குவர். 1996-97 இல் இந்தியாவில் சுற்றுலாவின் மூலம் மொத்தம் 21.1 மில்லியன் பேர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

பெரும்பாலான மேலை நாடுகளில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே சுற்றுலாத்துறையில் பணிபுரிகின்றனர். குறிப்பாக அதிலும் சிறப்பாக பிரிட்டனில் விடுதிகளிலும் விடுமுறைத் தொழில்களிலும் ஏறத்தாழ 70 சதவீதம் பெண்கள் பணிபுரிகின்றனர். இந்தியாவிலோ ஆண்கள் அதிகம் பணிபுரிகின்றனர். அண்மைக்காலத்தில் பெண் பணியாளர்களின் தொகை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் ஏறத்தாழ நாலரை மில்லியன் போகள் சுற்றுலாவினால் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 1994 ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை கூடியது. வேலையற்றோர் மிகுதியாக உள்ள நம் நாட்டில் சுற்றுலா ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது.

**பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றம்**

பொதுவாகப் பொருளாதார முன்னேற்றம் பெற்ற, பணக்கார நாடுகளில் வாழ்கின்றவர்கள் தான் அதிக பணம் செலவழித்து, பல நாடுகளுக்குச் சுற்றுலா சென்று மகிழ்கின்றனர். இப்பணக்கார நாட்டின் பயணிகள் பின்தங்கிய நாடுகளுக்குப் பயணம் செய்யும் போது,பின்தங்கிய

நாடு நல்ல பயனடைகிறது. பணக்காரப் பயணிகளும் தாம் கடினமாகச் சம்பாதித்த பணத்தை, இன்பப் பொழுது போக்கில் செலவழிக்கின்றனர். அதனால் பின் தங்கிய, வளங்குறைந்த நாடுகள் தமது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்கின்றன. அயல்நாட்டுப் பயணிகள் தமது நாட்டிற்கு வந்து செலவழிக்கும் பணத்தைப் பின்தங்கிய நாடுகள் தமது விவசாயத்தையும், தொழிலையும் முன்னேற்றப் பயன்படுத்திக் கொள்கின்றன. பெரிய யந்திரங்களையும், கருவிகளையும் இறக்குமதி செய்கின்றன. இதன் விளைவாகப் பெருமளவில் முன்னேறுகின்றன. பின் தங்கிய நாடுகள், முன்னேறிய நாடுகளைப் போன்று அதிக அளவில் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய இயலாது. எனவே இவற்றின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பு குறைவாகவே இருக்கும். மாறாக இறக்குமதிப் பொருள்களின் மதிப்பு அதிகமாகவே இருக்கும். இதனால் இவை பாதகமான வாணிகச் சமநிலையில் தத்தளிக்கும். இச்சமயத்தில்தான், சுற்றுலாவின் வருவாய் மூலம் வரும் அந்நியச் செலாவணி இப்பிறபட்ட நாடுகளுக்குத் தோன்றாத் துணையாக விளங்ககுகிறது. பாதகமான வாணிகச் சமநிலையைச்சீர் செய்வதுடன், செலுத்துதல் சமநிலையைச் சமாளிக்கவும் சுற்றுலா வருவாய் உதவுகிறது. எனவேதான் பின் தங்கிய நாடுகள் திட்டமிட்டுச் சுற்றுலாவை மேம்படுத்துகின்றன; பொருளாதாரச் சீர்கேட்டை ஓட்டுகின்றன. பொருள் உற்பத்திக்கான செலவைக் காட்டிலும் சுற்றுலாவை முன்னேற்ற ஆகும் செலவு குறைவுதான்.

அடுத்து குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தருவது சுற்றுலாத்தொழில். எடுத்துக் காட்டாக ஒரு டாலர் செலவு செய்தால் நூற்றுக்கு மேற்பட்ட டாலர்கள் வருவாய் கிடைக்கிறது. ஒரு டாலர் செலவு செய்து சிங்கப்பூர் 141 டாலர்களையும் நெதர்லாந்து 122 டாலர்களையும், இஸ்ரேல் 77 டாலர்களையும், வருவாயாகப் பெற்றுள்ளது என்பதை நாம் இங்கே மறந்து விடக்கூடாது. சுற்றுலாத் தொழில் அதிக அள்வில் அந்நியச் செலாவணியையும் ஈட்டுத் தருகிறது.

**சுற்றுலா வருவாய் அதிகரிப்பு**

ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பு எப்போதும் ஓரே சீராக இருப்பது இல்லை. இது நிரந்தரமானதுமல்ல. ஏற்றுமதிகள் ஓராண்டு கூடலாம், மறு ஆண்டு குறையலாம். ஆனால் சுற்றுலாத் தொழிலோ விரைந்து வளர்ந்து கொண்டுள்ளது. சுற்றுலாவில் வரும் வருவாயும் குறையாமல் கூடிக் கொண்டே உள்ளது. எடுத்துக்காட்டாக நம் பாரதத்தை எடுத்துக்கொள்வோம். 1969ம் ஆண்டு சுற்றுலாவின் மூலம் 333



இலட்சங்களைப் பெற்ற நாம் 1971இல் 438 லட்சங்களைப் பெற்றுள்ளோம். 1980 இல் இத்தொகை 4820 லட்சங்களாகவும் 1981ல் 5640 லட்சங்களாகவும்,பெருகியுள்ளது. 1982இல் 7500 லட்சங்கள் பெற்று அசுர வேகத்தில் முன்னேறியுள்ளோம். 1988ஆம் ஆண்டு நம்நாடு சுற்றுலாவின் மூலம் 2103 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியைப் பெற்றது நம நாடு 1994இல் 1990 ஆம் ஆண்டைக்காட்டிலும் 160கோடி ரூபாய் அதிகமாகப் பெற்றது. 1998 இல் 11950 கோடி ரூபாயை (3132.53 மில்லியன் டாலர்கள்) இந்தியா வருவாயாகப் பெற்றுள்ளது. 1998 இல் கணினி (கம்ப்யூட்டர்) மென்பொருள் ஏற்றுமதியின் வருவாய் ரூ. 45000 கோடி ரூபாய். எனவே கம்ப்யூட்டர் ஏற்றுமதி வருவாயை விட ரூ. 7450 கோடி அதிகம பெற்றுள்ளோம். ஒரு அயல்நாட்டுப்பயணி நம் நாட்டில் சராசரியாக ரூ. 16000/செலவழிக்கிறார்.

8-7-2000 நாளிட்ட தினமலரில் இந்திய சுற்றுலா வளர்ச்சி பற்றிக் கீழ்க்காணும் செய்தி வெளியாகியுள்ளது.

“கடந்த ஆறு மாதங்களில் இந்தியாவிற்கு 1256133 அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியர் வந்துள்ளனர். கடந்த ஆண்டை விட இது 6.3% அதிகம். 2000 ஜூன் வரையில் 6648 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி மூலம் வருவாய் வந்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காடடிலும் 9.8% அதிகம். பிப்ரவரியில் மட்டும் 1417 கோடி -ரூபாய் வருவாய் கிடைத்தது. ஒரே மாதத்தில் கிடைத்த வருவாய்களுள் இதுவே அதிகம்” .

இதனால் நாம் சுற்றுலாத் துறையில் முன்னேறிக் கொண்டுள்ளோம் என்பது தெளிவு.

**மனித சக்தியின் மேம்பாடு**

தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் மனித சக்தித் திறன் மேம்பாட்டிற்கும் சுற்றுலா ஆதாரமாக அமைந்துள்ளது. வளரும் நாடுகளில் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்கி தொழில் வல்லுநர்களை உருவாக்குகின்றது. சுற்றுலா பலருக்கு வேலை வாய்ப்பளிப்பதுடன் மனித சக்தி வள மேம்பாட்டையும் உருவாக்குகின்றது.

**சுற்றுலாவும் வரி வருவாயும்**

ஒவ்வொரு நாடும் சுற்றுலாவினால் நல்ல வருவாயைப் பெறுகின்றன. சுங்கத்தீர்வையும் பயணவரிகளும் நாட்டின் வருமானத்தைப் பெருக்குகின்றன. பயணிகள், விமானப் பயண வரிகள், உணவு விடுதிகள், கைவினைப் பொருள்கள் வரிகள், போன்று பல நேரடி வரிகளைச் செலத்துகின்றனர். சுற்றுலா சார்பு நிறுவனங்களும் வரி செலுத்துகின்றன.

இதனால் நாடும் தனிமனிதனும் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்கினறனர்.

1936 ஆம் ஆண்டு கூடிய சர்வதேச சங்கத்தின் பொருளாதாரக்குழு சுற்றுலாவின் பொதுவான பொருளாதார நன்மைகளையும் பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குச் சுற்றுலா காரணமாக இருப்பதையும் கீழ்க்காணும் வகையில் கோடிட்டுக் காட்டுகிறது.

1. சுற்றுலாவின் அந்நியச் செலாவணி உருவாக்கும் தன்மை.
2. சுற்றுலா ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது.
3. அடிப்படைப் பொருளின் விலைகளின் மாறுதலைத் தவிர்க்கும் திறன் கொண்டது.

**பொதுவான பொருளாதார நன்மைகள்:**

அ) வேலை வாய்ப்பினை அதிகரிக்கின்றது.

ஆ) வளர்ச்சியின் முக்கிய காரணமாக விளங்குகிறது.

இ) பன்னாட்டு வணிகத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதுடன் தேசியப் பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்கும் துணை புரிகிறது.

ஈ) பல நாடுகளின் வரவு செலவு மற்றும் சமநிலைப் பட்டுவாடாவை நிர்ணயிப்பதில் உதவுகிறது.

உ) அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கிறது.


ஊ) பயணிகளின் வசதிக்காக விடுதிகள், உணவகங்கள், போக்குவரத்து, அங்காடிகள், பொழுது போக்கு மையங்கள் ஆகியனவற்றின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது.

எ) நாட்டின் வளர்ச்சிக்கு சுற்றுலா முதலீடு செய்கிறது. சுற்றுலா வளர்ச்சியின் அடிப்படைத் தேவைகளான விமான நிலையம், போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள் போன்றவற்றை மேம்படுத்தத் துணைபுரிகின்றது.

1980 இல் மணிலா அறிக்கை, சுற்றுலாவின் பொருளாதார முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகின்றது. சுற்றுலாவை, நாடுகளின் மற்றும் மக்களின் பொருளாதாரச் செயல் எனச் சுட்டுவது இங்கே குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுலா பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள கோடிக்கணக்கான மக்களின் ஜீவாதாரமாகத் திகழ்கிறது. சுற்றுலாத் தொழில், மற்ற தொழில்களின் வளர்ச்சிக்கும் துணை புரிகின்றது.



**முடிவுரை :** இவ்வாறு சுற்றுலா பன்னாட்டுப் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் சுற்றுலாவின் பங்களிப்பு பெரியது என்பது அறியப்படுகின்றது.



மாமல்லபுரம் - கடற்கரைக் கோயில்

## 5. நவீன காலத்தில் சுற்றுலாவின் முக்கியம் - குறிப்பாக இந்தியாவைப் பற்றி

கற்காலம் முதல் தற்காலம் வரையில் பயணங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப்பயணங்கள் அனைத்தும் சுற்றுலா அல்ல. பழங்காலச் சுற்றுலா தற்காலச் சுற்றுலாவினின்றும் வேறுபட்டது. பலர் அன்று பெரும்பாலும் பொருள் தேடவே பல இடங்களுக்குச் சென்றனர்; வணிகத்தின் பொருட்டும், போர்புரியும் பொருட்டும், கல்வி கற்கும் பொருட்டும் அன்று பலர் வெளியிடங்களுக்குச் சென்றனர். பொருளாதார வசதியும், போக்குவரத்து வசதியும், அறிவியல் முன்னேற்றமும், தங்குமிட வசதியும் அன்று இல்லாத காரணத்தால், சுற்றுலா வளர்ச்சி பெறாத நிலையில் இருந்தது. காலம் செல்லச் செல்லப் புதிய நாடுகளைக் காணும் ஆர்வம் பெருகியது. அதற்கேற்பப் போக்குவரத்து வசதிகளும் பெருகின. இரயில், கார், சொகுசு கார், கப்பல், ஆகாயவிமானம், ஜெட் விமானம், போயிங் 747 விமானம் போன்றவை தற்காலத்தில் பெருகிவிட்டதால் சுற்றுலாவும் பெருகிக் கொண்டே வருகிறது. சுற்றுலாவிற்குத் தொழில்தகுதி வழங்கப்பட்டுள்ளதால் இது விரைந்து முன்னேறுகிறது.

### இரண்டாம் உலகப் போருக்குப்பின் முன்னேற்றம்

சுற்றுலா இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தபின் மக்கள் மத்தியில் பெரிதும் செல்வாக்குப் பெற்றது. 1945க்குப் பின் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணமும் அதிகரித்தது. 1955-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளில் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை 51 மில்லியனிலிருந்து 157 மில்லியனாக உயர்ந்தது. பத்து ஆண்டுகளில் இது மூன்று மடங்கு உயர்ந்துள்ளது என்பது இங்கே கவனிக்கத்தக்கது.



மேற்குறிப்பிட்ட பயணியருள் 30 சதவிகிதத்தினர் அமெரிக்கா, ஜெர்மனி முதலான நாடுகளுக்கே சென்றுள்ளனர். காரணம் கல்வி, போக்குவரத்து, தங்கும் விடுதி வசதிகள் ஆகியன அங்கு வளர்ச்சி பெற்றுள்ளன.

அண்மைக் காலத்தில் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. 1979 ஆம் ஆண்டில் 270 மில்லியன் சுற்றுலாப் பயணியர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் 75000 மில்லியன் (அமெரிக்க) டாலர் வருவாய் கிட்டியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே சுற்றுலாத்துறை முன்னேறிய போதிலும் 1976-க்குப் பின்னர்தான் இத்துறை வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது.

### வருவாய்ப் பெருக்கம்

பன்னாட்டுச் சுற்றுலாவின் மூலம் உலகின் பல நாடுகள் தமது வருவாயைப் பெருக்கிக் கொண்டுள்ளன. சில நாடுகளின் சுற்றுலா வருவாய் அவற்றின் தேசிய வருவாயில் முக்கிய பகுதியாக அமைந்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் பார்படோஸ் முன்னணியில் நிற்கிறது. அது சுற்றுலாவின் மூலம் பெறும் வருவாய்; தனது தேசிய வருவாயில் கால் பகுதியாக இருக்கிறது என்பது பாராட்டத்தக்கது. ஆஸ்திரேலியா, ஸ்பெயின், அயர்லாந்து, ஜமைக்கா, மெக்ஸிகோ முதலான நாடுகள் தமது தேசிய வருமானத்தில் 50 சதவீதத்துக்கு மேல் சுற்றுலாவின் மூலம் பெறுகின்றன.

ஸ்பெயின் போன்று உலகின் பல நாடுகள் சுற்றுலாவை ஒரு முக்கியத் தொழிலாகவே கருதி, அதற்கெனத் திட்டங்கள் தீட்டி, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்துப் பெரும் பொருள் ஈட்டுகின்றன. இவ்வகையில் ஸ்பெயின், பனாமா, ஜோர்டான், மெக்ஸிகோ, ஜமைக்கா, கனடா முதலான நாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளன. 1978ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் மக்கள் தொகை 40 மில்லியன். அந்நாட்டிற்கு வருகை தந்த அயல்நாட்டுப் பயணியரின் எண்ணிக்கையும் 40 மில்லியன். இதன் மூலம் ஸ்பெயின் எவ்வாறு அயல்நாட்டுப் பயணியரைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிக் கன்னியாக விளங்கியது என்பதனை அறியலாம். கனடாவும் சுற்றுலாத்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. செய்தித்தாள் உற்பத்திக்கு அடுத்த நிலையில் அங்கே சுற்றுலாத் தொழில் வளர்ந்துள்ளது.